உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—௨௭.] சுக்கிலஹு புரட்டாசிமீ [பகுதி—௧௧.
Vol. XXVII. *September-October-1929.* No. 11.

## சேரவேந்தர் தாயவழக்கு.

இராமநாதபுரம்
ஸ்ரீமத். மு. இராகவையங்காரவர்கள்
எழுதியது.

[௩௫௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### iii. மக்கட்டாயமுறைக்குரிய பொருள்.

[8-ம் காரணம்.]

இதுவரை விரிவாக யான் கூறிப்போந்தவற்றால், பதிற்றுப்பத்துப் பதிகத்தொடர்களும் இளங்கோவடிகளது கூற்றும் மருமக்கட்டாயமே குறிப்பனவாகக்கருதி யெழுதப்பட்ட பொருள்களும் புறச்சான்றுகளும் சிறிதும் ஏற்புடையவாகாமை கரதலாமலகமாகும். ஆகவே, மக்கட்டாயமே அத்தொடர்களை அமைத்த ஆசிரியர்கருத்து என்பது கூறவேண்டாதது. மக்கட்டாயமுறைக்கு அத்தொடர்கள் எங்ஙனம் சொன்முறையில் அமைந்துள்ளன என்பதை இனி விளக்குவேன்.

[தேவிச்சொல்லின் பொருள்.]

"சேரலாதற்கு வேளாவிக்கோமான் பதுமன்றேவி ஈன்ற மகன்"

"அந்துவற் கொருதந்தை யீன்ற மகள்
பொறையன் பெருந்தேவி யீன்ற மகன்"

என்ற தொடர்களிற்கண்ட தேவி என்ற சொல், மக்களுள் பேரரசன் சிற்றரசன் மனைவியையன்றிப் பிறிதுகுறியாதென்று கருதப்படுகின்

றது. மனைவிப்பொருளில் தேவிச்சொல் பெரிதும் வழங்குவதேனும் அதற்கு வேறுபொருளில்லை என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க தன்று. வடமொழிநாடகமுதலியவற்றில், தலைவியரைக் குறிக்குமிடங்களிலே தேவி என்ற சொல்லால் அவரை வழங்குதல் பெருவழக்காம். அங்கெல்லாம் அச்சொல் மனைவியென்னும்பொருளிலன்றிக் கோமகள் தலைவி என்ற பொருளில் கௌரவவாசகமாகவே நிற்றல் காணலாம். "வளர்த்த தாய்க்குச் சித்திரத் தேவிப்பட்டந் திருமகன் நல்கினானே" என்று, சீவகன் தன்னைவளர்த்த சுநந்தைக்குத் தேவி என்ற பட்டஞ்சூட்டிய செய்தியைச் சிந்தாமணி கூறுகின்றது. இப்பட்டத்துக்கு மனைவி என்பது பொருளன்றென்பதும், தன்னைவளர்த்த தந்தைக்கு அரசுநிலை நல்கியவாறே, அத்தகைய தாய்க்குக் கோமகள் என்ற பெருஞ்சிறப்புப்பெயரைச் சீவகன் நல்கினான் என்பதுமே கருத்தாதல் கண்டு கொள்க. இத்தேவிச்சொல் கோமகள் என்ற பொருளிலே, அரசன் பெற்ற மகட்கு வழங்குவதுமுண்டு, இவை வடநூல்வல்லார்வாய்க் கேட்டறியத்தகும்.*

தேவிச்சொல்லின் பொருண்முறை ஒருபுறம் நிற்க. 'பதுமன்றேவி' 'பொறையன் பெருந்தேவி' என்பன், சேரரின் கோப்பெண்டிர்க்கு அக்காலத்து நன்மக்கள் வழங்கிய சிறப்புப்பெயர்கள் என்றே ஈண்டுக் கொள்ளற்குரியனவாம். அக் கோப்பெண்டிரிற்சிலரைப் பதிகவாசிரியர் நல்லினி, அந்துவஞ்செள்ளை என இயற்பெயரால் குறிப்பிட்டவாறே, அவருள் வேறுசிலரைப் பதுமன்றேவி, பொறையன்பெருந்தேவி என நாட்டார்வழங்கிய சிறப்புப்பெயர்களாலும் அவர் குறிப்பிடலாயினரென்க. இவ்வாறில்லையேல், பதிகங்கள்கூறும் சேரர்கோப்பெண்டிர் நால்வருள் இருவர்க்கே இயற்பெயர்கூறி, ஏனையிருவர்க்கு அவை கூறாமலொழிந்தார் அவ்வாசிரியர் எனல்வேண்டும். இஃது அவர் எடுத்துக் கொண்ட முறைக்கு ஏற்றதன்றாதலோடு, பெயர்தெரியாதவர் அக்கோப்பெண்டிர் என்று பிறர்கருதவும் படுமாதலின், அத்துணைச் சிறப்பின்றாதல் காண்க. மூவேந்தர்வழிவந்த பேரரசரின் பெருங்கோப்பெண்

---

* இக்கருத்துப்பற்றியே—ஸர். மானியர் வில்லியம்ஸ் என்ற ஆங்கிலேய பண்டிதர் இயற்றிய ஸம்ஸ்கிருதப் பேரகராதியிலும்-"Devi-The consecrated wife or daughter of a king; lady" ("தேவி- அபிஷிக்த அரசன் மனைவி அல்லது அவன் மகள்; தலைவி" என்று எழுதப்பட்டுள்ளமைகாண்க (p. 496).

டுகள்-வானவன்மாதேவி, சோழன்மாதேவி, பஞ்சவன்மாதேவி அல்லது மீனவன்மாதேவி என இவ்வாறு சிறப்பியற்பெயர்கொண்டு வழங்கப் பெறுதலைச் சாஸனங்கள்வாயிலாக நன்கறியலாம். பிற பெருங்குடிப் பிறந்த இப்பெண்டிர்க்கு, அவர்தம் பெற்றோரிட்ட இயற்பெயர்களும் வேறாக வழங்கியிருத்தல்கூடியதே. ஆனால், பேரரசர்குடியிற் புக்கபின் அவை மறக்கப்பட்டு, மேற்காட்டிய வானவன்மாதேவிபோன்ற சிறப்புப் பெயர்களே அவர்க்கு இயற்பெயர்போல வழங்குவனவாயின. எனினும், நல்லினி, அந்துவஞ்செள்ளை என்பனபோலக் கோக்குடியிற் புகுமுன் கொண்டிருந்த இயற்பெயரால் அன்னோர் வழங்கப்பட்டதும் உண்டு. இவ்வாறு, பெருவேந்தர்வழியிற் பின்னோர்கொண்டிருந்த இத்தகைப் பெயர்வழக்குக்கள், அவர் முன்னோர்க்கும் உரியனவே என்பதற்கு வேண்டிய பிரமாணங்கள் காட்டலாம்.* அம்முறையில், பதுமன்றேவி பொறையன்பெருந்தேவி என்பன கோப்பெண்டிர்க்கு அக்காலத்தார் வழங்கிய சிறப்பியற்பெயர்களே† என்று கொள்ளத் தடையில்லையென உணர்க.

மேற்குறித்த பெருங்கோப்பெண்டிருள் வானவன்மாதேவி என்பாள் இற்றைக்கு ஓராயிரவாண்டுகட்குமுன் சின்னமனூர்த் தானசாஸனஞ்செய்வித்த பாண்டியன் இராசசிங்கனது தாயும், சடையன் ஸ்ரீ பராந்தகன் என்ற அவன்தந்தையின் பெருந்தேவியும் ஆவள். "வானவன்மா தேவியேனு மலர்மடந்தை முன்பயந்த, மீனவர்கோ னிராசசிங்கன்" என்பது அவன் சாஸனத்தொடர். இதுவே பெயர், முதவிராஜராஜசோழனுடைய தாய்க்கும் வழங்கியது. இவள் இரண்டாம் பராந்தகனான சுந்தரசோழற்குப் பெருந்தேவியாய், அவனிறந்தபோது தன் அரசிளங்குழவியையுங் கருதாது தீப்பாய்ந்து உடனுயிர்நீத்தவள். இங்ஙனம் பாண்டியவமிசத்தும் சோழவமிசத்தும் புக்க வானவன்மாதேவி என்ற பெயருடையாரிருவரும் சேரர்மகளிரே என்பது ஐய

---

* "இலக்கிய சாஸன வழக்காறுகள்" (Epigraphy and Tamil Literature) என்ற விஷயம்பற்றி, யான் புரிந்த சருவகலாசங்க - உபந்நியாசங்களிலே இத்தகையசெய்திகள் பாக்கக் கூறப்பட்டுள்ளன. (இந்நூல் கூடிய விரைவில் அச்சிட்டு வெளியிடப்பெறும்.)

†பன்னிருபாட்டியல் சூத்திரம்-151,

மறத்தெளிந்தது[1]. இனிச் சோழன்மாதேவி, பஞ்சவன்மாதேவி என்பன முதலிராஜராஜசோழன் பெருந்தேவியர் இருவர்க்கு வழங்கிய பெயர்களாம். இவ்வாறே முதற்பராந்தகசோழன்மகனான இராஜகேசரிவர்மன் தேவியரிருவர்க்கு 'வளவன்மாதேவியார்' 'தென்னவன்மாதேவியார்' என்பன பெயர்களாயுள்ளன[2]. இவர்களுள் பஞ்சவன்மாதேவி, தென்னவன்மாதேவி இருவரும் பாண்டியர்பெற்ற மகளிராய்ச் சோழர்மரபிற் புக்கவரென்பது அவர் பெயர்களால் தெரியலாம்.

இப்பெயர்களை ஆராயுமிடத்து, மாதேவி என்ற சொல் இருவேறு வகையில் வழங்குதல் அறியப்படும். வானவன்மாதேவி, பஞ்சவன் மாதேவி, தென்னவன்மாதேவி என்ற தொகைமொழிகள் 'வானவன்மகளான, பஞ்சவன்மகளான, தென்னவன் மகளான'மாதேவி என—விரிந்தும், சோழன்மாதேவி, வளவன்மாதேவி என்ற தொகைமொழிகள் சோழனுக்குப்புக்க, வளவனுக்குப்புக்க—மாதேவி என்று விரிந்தும் நிற்றலையும், முன்வகையில் மாதேவி என்பது 'கோமகள்' என்ற பொருளிலும், பின் வகையில் அது 'ராஜபத்தினி' என்ற பொருளிலும் வழங்குதலையும் நாம் நன்கறியலாகும். இவ்வாறன்றி, அச்சோழரின்மனைவியரை வானவற்குப் புக்க, பஞ்சவற்குப் புக்க—மாதேவி எனினும், சோழன்பெற்ற, வளவன் பெற்ற—மாதேவியெனினும் அவை பொருண்மலைவுடையனவாகும். இங்ஙனம் தேவிச்சொல் வழங்கிய பொருண்முறையே பதிற்றுப்பத்துப் பதிகங்களிற் கண்ட கோப்பெண்டிர்பெயர்களையும் நாம் கொண்டுநோக்கத் தக்கது. அம்முறையில், பதுமன்றேவி என்பது பதுமன்பெற்ற கோ

---

[1] The *Pandyan Kingdom* by Mr. K.A. Nilakanta Sastri, Professor of Indian History, The University of Madras.pp. 79, 82.

"செந்திரு மடந்தைமன் சீராச ராச(னும்), புலியைப் பயந்த பொன்மான் கலியைக், கரந்து கரவாக் காரிகை சுரந்த, முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவணுந், தலைமகற் பிரியாத் தையல் நிலைபெறுந், திருப்புய முயங்குந் தேவி விருப்புடன், வந்துதித் தருளிய மலையர்திருக் குலத்தோர்" என்ற முதலிராஜராஜசோழன் சாஸனப்பகுதியுள் (செந்தமிழ். தொ - 4, பக். 232-5), கணவனுடன் திப்பாய்ந்திறந்த அவன்தாய் சேரர்குலத்தவளாகக் கூறப்பட்டிருத்தல் காண்க. [மலையர் - சேரர்; "சேரன் மலையன் பொறையன்" என்ற இளங்கோவடிகள் வாக்கும் பழைய நிகண்டுகளும் காண்க.]

[2] S. I. I. Vol. V, pp. 221, 287.

மகள் என்வும், பொறையன் பெருந்தேவி என்பது பொறையனுக்கு (சேரனுக்கு)ப் புக்க கோப்பெண்டு எனவும் விரிந்து பொருள்பெறும். இவற்றால், தேவி என்பது மனைவி என்ற பொருளுமுடையதேனும் அப்பொருளொன்றற்கே உரியது என்றகூற்றுப் பொருந்தாமை தெரியலாம். இங்ஙனம் உறுப்புப்பொருளுடையவேனும் வானவன்மாதேவி சோழமாதேவி என்பனபோலவே பதுமன்தேவி பொறையன்பெருந்தேவி என்பன பெருங்கோப்பெண்டிர்க்கு அக்காலத்தார் வழங்கிய சிறப்பியற்பெயர்களே என்பது நாம் மறக்கற்பாலதன்று.

## [வேண்மாட்சொல்லின் பொருள்.]

இனி, வேண்மாள் என்ற சொல்லை நோக்குவோம். இதுவும் தேவிச்சொற்போலவே, பேரரசர் சிற்றரசர் மனைவியரையன்றிப் பிறிது குறியாதென்றும், செங்குட்டுவன்மனைவியை 'வேண்மாள்' எனவும், நன்னன்மனைவி உதியன்மனைவியரை முறையே நன்னன்வேண்மாள் உதியன்வேண்மாள் எனவும் முன்னோர்வழங்குதலால் அது பெறப்படும் என்றும் கருதப்படுகின்றன. இக்கருத்துக்களும் தவறாகும். வேண்மாள் என்பதற்கு வேளிர்குலமகள் என்பது பொருள். இதன் ஆண்பாற்சொல் 'வேண்மான்' என்பது. நன்னன் வேண்மான், இருங்கோ வேண்மான் என்ற இயற்பெயர்கள் கொண்ட சிற்றரசருளர்; நன்னன் என்ற வேள்குலத்தோன்றல், இருங்கோ என்ற வேள்குலத்தோன்றல் என்பன இவற்றின் உறுப்புப்பொருள்களாம். பிறர்கருத்துப்படி வேண்மாள் என்பது மனைவிப்பொருளதேயாயின், வேண்மான் என்பது கணவன் என்ற பொருளினையே உணர்த்தல்வேண்டும். அவ்வாறு யாண்டுந் தமிழ்வழக்கின்மை காண்க. அன்றியும் செங்குட்டுவன்மனைவிக்கு இளங்கோவேண்மாள் என்ற பெயர்வழக்குண்டென்பது—

> "வானவர் தோன்றல் வாய்வாட் கோதை
> விளங்கில வந்திகை வெள்ளிமாடத்து
> இளங்கோ வேண்மா ளுடனிருந் தருளி" (25, 3—5)

என்ற இளங்கோவடிகள்வாக்கால் உணரப்படும். இதற்கு— இளங்கோவேண்மாள், பெயர்; நன்னன்வேண்மாள், உதியன்வேண்மாள் என்பனபோல--என முன்னோரான அரும்பதவுரையாசிரியர் எழுதியுள்ள குறிப்பு ஈண்டு அறியத்தக்கது. இவ்வாறு இளங்கோவேண்மாளை ஒரு

பெயராக வழக்குநோக்கிக் கொண்ட அவ்வுரையாசிரியர்க்கு, அதற்கு ஒத்த உதாரணங்களாக அவர் காட்டிய நன்னன்வேண்மாள் உதியன் வேண்மாள் என்ற தொகைமொழிகளும் ஒருபெயர் நீர்மையன என்பதும், செங்குட்டுவன்மனைவிக்குப்போல மூவேந்தரின் போரசியர் சிலருக்கு அக்காலத்தார்வழங்கிய சிறப்பியற்பெயர்கள் அவை என்பதுமே கருத்தாதல் தெளிவாம். வேண்மாட்சொற்குப் பிறர்கருதியவாறு மனைவியென்பதே பொருளாயின், 'இளங்கோவேண்மாள்' என்பதற்கும் இளங்கோவின் மனைவி என்பதே பொருளாதல் வேண்டும். செங்குட்டுவனே பெருங்கோவன்றி இளங்கோவல்லன். அவனிளவலோ, அரசபோகத்தைச் சிறுபருவத்தே துறந்த பெரியோராவர். ஆயினும் இளங்கோவேண்மாள் செங்குட்டுவன்தேவியேயன்றி வேறெவளும் அல்லள். அதனால், வேண்மாள் என்ற பெயரின்முன் நிற்றல்கொண்டு, இளங்கோ என்பது வேளிர்குடிகளுள் ஒன்று என்று ஈண்டுக்கொள்ளுதலன்றி வேறுவழியில்லையாம். இதுபோன்றனவே நன்னன்வேண்மாள், உதியன் வேண்மாள் என்பனவும். நன்னன்மனைவி, உதியன்மனைவி என்ற கருத்துடன் அரும்பதவுரையாசிரியர் இப்பெயர்களை உதகரித்தவரல்லர் என்பது, இளங்கோவேண்மாட்கு ஒத்தபெயர்களாக இவற்றை அவர் காட்டிப்போதலால் விளக்கமாம். ஆகவே, இளங்கோவேளிரின் குலமகளே செங்குட்டுவன்தேவி என்றும், நன்னன்வேண்மாள், உதியன் வேண்மாள் என்பனவும் நன்னன்வேளின் குலத்தவள், உதியன் வேளின் குலத்தவள்[1] என்ற உறப்புப்பொருளுடன் ஒருபெயர்நீரவாய்ப் போரசியர்க்கு வழங்கிய சிறப்பியற்பெயர்களாம் என்றும் கொள்ளத்தக்கன. இளங்கோ என்பார் வேளிர்குடியினரென்பது செங்குட்டுவன் தேவிப்பெயர்கொண்டுமட்டும் ஊகித்தறிந்ததன்று. இருங்கோவேள், இருக்குவேள், இளங்கோவேள் என்பன, 'கொடும்பை' என்று சிலப்பதிகாரங்குறிக்கும் கொடும்பாளூரில் இருந்தாட்சிபுரிந்த வேளிர்க்கு வழங்கிய குலப்பெயர்களாகும்.[2]

---

[1] சோழன்மாதேவி என்பது சோழனுக்குப் புக்க மாதேவி என்று பொருள் பயத்தல்போல, உதியன்வேண்மாள் என்பது உதியனுக்குப் புக்க வேள்குலமகள் என்று கொள்ளினும் அமையும்.

[2] Ep. Rep. 1908, p.p. 87—9; Ibid No. 315 of 1913.

"செம்பியன் இளங்கோவேளார் பூதி ஆதிச்சன்"
தென்னவன் இளங்கோவேளார் பூதி ஆதிச்சபிடாரன்"

என முன்னோரான கொடும்பாளூர்வேளிர் சிலர் சாஸனங்களிற் கூறப்படுகின்றனர். பிற்காலத்தும் சோழவதிகாரிகளிற் பலர், இம்மரபினராகவே விளங்கினர் என்பது இளங்கோவேளார் என்ற சிறப்புப்பெயருடன் அன்னோர் சாஸனங்களில் வழங்கப்படுதலால் அறியலாகும்.[1] இளங்கோ வேளிர், இருக்குவேளிர் எனப்பட்ட வேள்குலத்தவருள் ஒருவரே கொடும்பாளூர் இடங்கழிநாயனார் என்பதும், இவ்வேளிரின் பேருதவி கொண்டு, அவருரிலிருந்து வெளிப்பட்டே, விஜயாலயன் என்பான் சோணாட்டைப் பல்லவரிடமிருந்து மீட்டுப்பெற்றுப் பிற்காலத்துச் சோழசக்கரவர்த்திகட்கு மூலபுருஷனாயினன் என்பதும் இங்கறியத் தக்கன. இவ்வாறு இளங்கோ என்பது வேளிர்தலைவர்க்கு வழங்கியது போலவே, நன்னன், உதியன் என்பனவும் வழங்குதலை—"நன்னன் வேண்மான்" (அகம். 97) 'நன்னனுதியன்' (ஷை. 258) என்பனவற்றால் அறிக.

இங்ஙனம் இளங்கோ என்ற வேள்குலமொன்று பழைமையாகவே உள்ளமையாலும், வேளிர்குலத்தினின்றே மகட்கோடல் மூவேந்தரின் தொன்றுதொட்ட மரபாதலாலும்[2], நன்னன்வேண்மாள் உதியன்வேண்மாள் எனப் பெருங்கோப்பெண்டிர்க்குப் பெயர்வழக்குண்மையாலும் 'இருங்கோவேண்மாள்—பெயர்' என்று தம்முள்ளத்துக்கு ஏற்புடைய கருத்தை முதலிற் கூறலாயினர் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர். இது பெரிதுஞ் சிறந்துகாட்டுதலை யாவரும் நன்கறியலாம். இனி, 'இளங்கோவேண்மாளுடனிருந்தருளி' என்ற அத்தொடர்க்கே "வேண்மாளுடன் இருந்து, இளங்கோவை அருளிப்பாடிட்டு என்றுமாம்" என வேறுகருத்தொன்றையும் அவ்வுரையாளர் வெளியிடுகின்றார், அஃது ஈண்டுச் சிறிது ஆராயத்தக்கது.

சேரன்-செங்குட்டுவன் "இலவந்திகை வெள்ளிமாடத்து இளங்கோ வேண்மாளுடனிருந்தருளிய"போது "மஞ்சசூழ்சோலை மலைகாண்குவம்" என்றுகூறித் தன் பெரும்பரிவாரங்களுடன் பேரியாற்றங்கரை சென்ற

[1] Inscriptions of the Madras Presidency, p. 1285.
[2] யான் எழுதிய 'வேளிர்வரலாறு' 22, 23-ம் பக்கங்கள் காண்க.

செய்தியை இளங்கோவடிகள் அழகுறப்பாடுதல் பலருமறிந்ததே. இளவேனிற்பருவத்தே நீராவியமைந்த மாளிகையில் வசித்துவந்த செங்குட்டுவனை—'இளங்கோவேண்மா ளுடனிருந்தருளி'யதாகக் கூறிய அடிகள்கருத்து வேனிலின்பந்துய்க்கவேண்டித் தன்பெருந்தேவியுடன் அவ்வசந்தமாளிகையில் அவ்வேந்தன் தங்கியிருந்தனன் என்பதேயாம். இவ்வாறன்றி அவ் வசந்தவின்பந் துய்த்தற்குத் தன் இளவலையும் ஆங்கு உடன்கொண்டிருந்தான் என்றுகொள்ளின், அஃது இளங்கோவடிகளது துறவுநிலைக்கு ஏற்புடையதன்றாகும். இவ்வேலாமையைக் கருத்துட்கொண்டே "இளங்கோ வேண்மா ளுடனிருந் தருளி" என்ற தொடர்க்கு, 'இளங்கோவுடனும் வேண்மாளுடனும் இருந்து' என்று நேரே பொருள்கூறாது—'வேண்மாளுடனிருந்து இளங்கோவை அருளிப்பாடிட்டு"[1] என்று மொழிமாற்றி வேறுபொருள் கூறுவாராயினர் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர். இதனால், வசந்தமாளிகையில் தன் தேவியுடன் தனித்திருந்தவனே செங்குட்டுவன் என்பதும், அப்போது மஞ்சுசூழ்சோலை மலைவளங்காண்டலை விரும்பி, வேற்றிடத்து[2] வசித்துவந்த தன் இளவலான அடிகளையும் அழைத்துவர அவன் ஆணையிட்டனன் என்பதும் பெறப்படுதல் காணலாம். 'இருந்தருளி' என்பதனை இருந்து, அருளி என இரண்டுவினையெச்சமாக்கி, அவற்றை இளங்கோ வேண்மாள் என்றுள்ள அமைதிக்கேற்ப நிரலே இணைக்காது எதிர்நிரனிறைபாக்கி—'வேண்மாளுடனிருந்து, இளங்கோவை அருளிப்பாடிட்டு' என்றுகூறும் இப்பக்ஷாந்தரப்பொருளே அடிகள்கருத்தென்று சொல்லற்குரியதன்று. அங்ஙனமாகவும், செங்குட்டுவன் தன்தேவியுடன் வசந்தவின்பந்துய்க்கும்போது துறவியான தன்னிளவலையும் உடன்கொண்டிருந்தவன் என்றகருத்து எங்ஙனம் பொருத்தமுறும்?

---

[1] அருளிப்பாடு என்பது, கடவுளர் அரசர் முதலியோரின் ஆணைகுறிக்குஞ் சொல்லாகும். "சடைமுடியவ ரருளிப்பாடு" (பெரியபு. வெள்ளானை, 33) 'ஆயசீ ராகவ னருளிப்பாடு' (இராமா. உத்தரகாண். அசுவமே. 157), "கணநாத ரருளிப்பா டென்றார்கள்" (கோயிற்புராணம். இரணிய. 51) என்பன காண்க. திருமால்கோயில்முதலியவற்றுள், இச்சொல் இப்பொருட்கண் இன்றும் வழங்குவதொன்றாகும்.

[2] 'குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த... இளங்கோவடிகள்' (பதிகம்) என்பதனால், அவர் வசித்தவிடம் வேறென்பது தெரியலாம்.

உடன்கொண்டிருந்தவன் என்றே பிறர் சாதிக்கமுயன்றாலும்—'இளங்கோவேண்மா ளுடனிருந் தருளி' என்ற ஒருதொடரை அடிகள் ஒருகாலும் அமைத்திரார் என்பது திண்ணம். அமைத்தவராயின், செங்குட்டுவனையடுத்து அவன் பெருந்தேவியைவைத்துச் சிறப்பிப்பதே முறையாகவும் அத்தேவி பிற்படும்படி தம்மையே அரசனுக்கு அடுத்துவைத்துப் பெருமைப்படுத்திக்கொண்டனர் என்றும், அவ்வாறு கொண்டவிடத்தும், 'இளங்கோவுக்கு வேண்மாள்' என்ற ஒரு விபரீதப்பொருளும் பயக்கும்படி ஒழுங்கற்ற தொடரொன்றை அமைத்தனர் என்றும் குறைகள் கூறவேண்டிவரும். அருங்கூறவும் பெரும்புலமையுமுடைய அவ்வடிகட்கு அத்தகைய குற்றநேரும்படி அவர்தொடர்க்குப் பொருள் கூறுதலே பெரியதோர் குற்றமாமென்க வசந்தமாளிகையில் தாமும் தம் தமையனுடன் இருந்துவந்தவராயின், 'வேண்மா ளிளங்கோ வுடன் வீற்றிருந்து' என்றவாறு, மேற்கூறிய குற்றங்கட்கிடனின்றிப் பாட இளங்கோவடிகள் அறியாதவ ரல்லரே? ஆதலின், 'இளங்கோவேண்மாள்' என்ற அவ்வடிகள்கருத்து, தம் தமையன்பெருந்தேவியை அவளது சிறப்பியற்பெயாற் குறிப்பிடுதலேயன்றித் தம்மையும் ஆண்டுக் கூறிக்கொள்வதன்று என்பது தேற்றமாமென்க. 'தமையன்மனைவியின் இயற்பெயரைத் தம்பி கூறுதலில்லை என்ற இக்காலத் தொருசாரார்வழக்குப் பண்டையோரும் கொண்டதொன்றே என்பதற்குமுன்னூற் பிரமாணம் ஒன்றுமே இல்லை. உள்ளதேனும், 'இளங்கோவேண்மாள்' என்பது சேரன்மாதேவிக்கு அக்காலத்தார் வழங்கிய சிறப்பியற்பெயரேயாதலால், அண்ணியின் இயற்பெயரைக்கூறி மரபுகெடுத்துவிட்டதாகக் கருதப்படும் பெருங்குற்றம் அடிகட்குச் சாருமாறுமில்லை என உணர்க.

இவற்றால், வேண்மாள் என்பது வேள்குலமகள் என்ற பொருளுடையதென்பதும், இருங்கோவேண்மாள் நன்னன்வேண்மாள் உதியன்வேண்மாள் என்பன, அவ்வேள்குலத்துதித்துப் பேரரசர்க்குப்புக்க கோப்பெருந்தேவியர்க்கு வழங்கிய சிறப்பியற்பெயர்களே என்பதும் தெளிவாயின. ஆகவே, பதிற்றுப்பத்துப் பதிகங்களிற்கண்ட வெளியன்வேண்மாள், மையூர்கிழான்வேண்மாள் என்பனவும்,—பதுமன்தேவி, பொறையன் பெருந்தேவி என்ற பெயர்கள்போலச்—சேரமாதேவியர்க்கு வழங்கிய சிறப்பியற்பெயர்களே என்பது தானேபெறத் தடையில்லை,

[பதுமன்றேவி.]

வேளாவிக்கோமான் பதுமன்றேவி என்ற தொகைநிலைத்தொடர், வேளாவிக்கோமான்மகளான பதுமன்றேவி எனவிரிந்து பொருள்பெறும். இதனை—

"அடிகள் கம்பன் மாறம்பாவை" (T. A. S. iii, 3)

"ஆழ்வார் ஸ்ரீபராந்தகன் குந்தவைப்பிராட்டியார்"
(I. M. P. Tj. No. 459)

என்ற பழைய கோப்பெண்டிர் பெயர்கள் அடிகள் கம்பனுன மாறனுக்கு மகள் பாவை, ஆழ்வாரான ஸ்ரீபராந்தகன்மகள் குந்தவைப்பிராட்டியார் என விரிந்து பொருள்பெறுதல்போலக் கொள்க. "அப்பெயர் மெய் யொழித்து" என்ற தொல்காப்பிய விதிப்படி* மாறம்பாவை ஸ்ரீபராந்தகன் குந்தவைப்பிராட்டியார் என்பவற்றில் மாறன் ஸ்ரீபராந்தகன் என்பன பாவை குந்தவை என்ற மகளிரின் தந்தையரைக் குறிப்பன. அடிகள் கம்பன், ஆழ்வார் என்று அவற்றின் முன்னிற்கும் பெயர்கள் அம் மாறன் ஸ்ரீபராந்தகன் என்ற தந்தையர்க்கு முறையே விசேடணங்களாய் அத்தந்தையரையே குறிப்பனவாம். இது பின்னரும் நன்குவிளக் கப்படும். இவைபோலவே, பதுமன்தேவி என்பது பதுமன்மகளான தேவி என்ற உறுப்புப்பொருளுடையதாய்த் தந்தைபெயரையும் உடன் கொண்டதாயினும், அதன் முன்னிற்கும் வேளாவிக்கோமான் என்ற தொடர் அப்பதுமனுக்கு விசேடணமாய் அவனையே உணர்த்திநின்றது. இனிச் சோழனுக்குப் புக்க மாதேவி—சோழமாதேவி, பாண்டியனுக்குப் புக்க மாதேவி—பாண்டிமாதேவி† என்றழைக்கப்பட்டவாறு, பொறைய னுக்குப் புக்க பெருந்தேவி—பொறையன்பெருந்தேவி எனப்பட்டாள்; [பொறையன்-சேரன்]. இது முன்னும் நன்குவிளக்கப்பட்டது. வெளி யன்வேண்மாள் மையூர்கிழான்வேண்மாள் என்பன, மேற்கூறிய தொல் காப்பிய விதிப்படி, வெளியனுக்கு மகளான வேண்மாள், மையூர்கிழா னுக்கு மகளான வேண்மாள் என விரிந்து பொருள்பயக்கும். மாந்தாஞ் சேரல், குட்டுவஞ்சேரல் என்பன மாந்தானுக்கு மகன் சேரல், (செங்)

* இச்சூத்திரப்பொருள் பின்பு நன்குவிளக்கப்படுமாதலின் ஆண்டுக் கண்டு கொள்க.

† 'பங்கயச்செல்வி பாண்டிமாதேவி', என்பது, சம்பந்தர் திருவாக்கு.

குட்டுவனுக்கு மகன் சேரல் என ஆண்மக்கட்கு வழங்குதலும் ஒப்பிடுக. வேண்மாள் என்பது தொடர்ந்த அவ்விரண்டு சிறப்பியற்பெயர்களும் முறையே நல்லினி அந்துவஞ்செள்ளை என்ற பெருந்தேவியர் இயற்பெயர்கட்கு விசேடணங்களாய் இருபெயரொட்டாயின. அஃதாவது 'வெளியன் வேண்மாளான நல்லினி' என்றிவ்வாறு விரியும். மையூர்கிழான் ஆவிக்கோமான் என்பன, கோப்பெண்டிரைப்பெற்ற தந்தையர்க்குச் சிறப்பியற்பெயர்களாமெனவும் உணர்க. கணக்காயனார் என்பது நக்கீரனார் தந்தைக்குச் சிறப்பியற்பெயராயுள்ளமை இதனுடன் ஒப்பிடத்தக்கது. [கணக்காயர்—ஒத்துரைப்போர். திவா]

## [பொறையன்பெருந்தேவி.]

இனி, 7-ம் பதிகவாக்கியம் மேற்கூறிய பதிகத்தொடர்கட்கு இதுகாறும் யான் கூறிவந்த கருத்தை மிகத் தெளிவாக விளக்கிநிற்பதாகும். அஃதாவது—

"அந்துவற் கொருதந்தை யீன்ற மகள்
பொறையன்பெருந்தேவி யீன்ற மகன்
—செல்வக் கடுங்கோ வாழியாதன்" என்பதே.

"ஒப்பற்ற தந்தைபெற்ற மகளான பொறையன் பெருந்தேவி, அந்துவன் என்ற சேரற்குப்பெற்ற மகன் செல்வக்கடுங்கோ" என்பது இத்தொடர்ப்பொழிப்பாம். ஈண்டு 'ஒருதந்தை' என்பது, 'ஒப்பற்ற பிதா' என்றபொருளுடையது. இவ்வாறுகூறியதற்கு ஏது அடியில்வருமாறு:— பாட்டுடைச்சேரரின் தாய்வழித்தூய்மை குறித்தற்கு அத்தாய்ப்பாட்டன்மாரை வெளியன், ஆவிக்கோமான், மையூர்கிழான் என்று இவ்வாறு குறித்துப்போந்த பதிக ஆசிரியர்க்கு, செல்வக்கடுங்கோவின் தாய்ப்பாட்டனையும் அவ்வாறு குறிப்பிடவேண்டிய இன்றியமையாமை நேர்ந்துளதென்பதும், ஆனால் ஏனையர்போல அத்தாய்ப்பாட்டன்பெயர் தெரியவாராமையின் அவன் உயர்குலப்பெருமையுடையவனே என்பதுபோதரப் 'பொறையன்பெருந்தேவியைப்பெற்ற சிறப்புடைய ஒப்பற்றபிதா' என்ற கருத்தமையக்கூறினாரென்பதும் விளக்குவனவன்றோ? பிற சேரவாசியரைப் 'பதுமன்றேவி' என்பதுபோல அவர் தந்தையருடன் இணைத்துச் சிறப்பியற்பெயராற் கூறிப்போந்த பதிகவாசிரியர், ஈண்டு அத்தகைப் பெயராற் கூறவியலாமையின் 'ஒரு தந்தையீன்றமகள்' என்

றும்,' அவ்வரசியின் புக்கவிடம்பற்றிப் 'பொறையன்பெருந்தேவி' என்றும் வேறுவகையாற் கூறலாயினர் என்பது அறியத்தகும். இதுபற்றியே அப்பதிகத்தொடர்க்குப் பொருளெழுதிய முன்னோரான அரும்பதவுரையாசிரியரும்—

"ஒருதந்தை என்றது பொறையன் பெருந்தேவியின்
பிதாவுடையது ஒருபெயர்"

என்று கூறுவாராயினர் எங்க.[1] இவ்வாறன்றி மருமக்கட்டாயத்துக்கேற்ப 'அந்துவனுடைய ஒரு தந்தை' என்று இணைக்குமிடத்துப் பொருட்பேறின்மையையும் தாய்வழியைச் சிறப்பியாது தந்தைவழியைச் சிறப்பித்தல் முதலிய குற்றங்கள் நிகழ்தலையும் மேலே நன்கு விளக்கினேன். அதனால் 'அந்துவனுக்கு' என முறைப்பொருளில்வந்த குவ்வுருபு 'மகன்' என்ற சொல்லுடன் இயைவதேயன்றி, 'ஒருதந்தை' என்றதனுடன் இயைவதன்று என்பது தெளியத்தக்கது. இவ்வாறு, எனைத்தொடர்கட்குத் தாம் கருதியுள்ளபொருள் இதுதான் என்பதைக் குறிப்பிக்கவே, இத்தகைய தொடரொன்றைத் தீபகம்போல அமைத்தனர் பதிகவாசிரியர் என்று சொல்லலாம். 'ஒருதந்தையீன்றமகள் பொறையன்பெருந்தேவி' என்ற அவ்வாசிரியர்க்கு—'வெளியனீன்றமகள் நல்லினி, வேளாவிக்கோமான் ஈன்றமகள் பதுமன்றேவி, மையூர்கிழான் ஈன்றமகள் அந்துவஞ்செள்ளை' என்பனவே கருத்தாமன்றிப் பிறிதாகாமை காண்க. எல்லாத்தொடர்களையும், எளிதிற் பொருள்விளங்க ஒருகருத்துமுறையில் வைத்துப்போந்த அவர், இத்தொடரைமட்டும்

[1] 'பொறையன்பெருந்தேவியின் பிதாவுடையது ஒருபெயர்' என்று அரும்பதவுரைகாரர் எழுதிச்செல்வதை நோக்குமிடத்து, ஒருதந்தை என்பது ஓர் இயற்பெயராகவே ஆதியிலிருந்து பின் பாடமாறியதோ என்ற ஐயம் நிகழ்கின்றது. அவ்வாறாயின், சாத்தன்தந்தை=சாத்தந்தை, கொற்றன்தந்தை=கொற்றந்தை என்றாயவாறு, ஒருதன்தந்தை=ஒருதந்தை என்று முடிந்ததெனல் வேண்டும். ஒருதன் என்ற இயற்பெயர் மக்கட்கு வழங்கியதாகத் தெரிந்திலது. எனினும் ஒருஉத்தன் என்ற பெயர்வழக்கு உண்டென்பது 'ஒரூஉத்தனார்' என்ற பழம்புலவர்பெயரினின்றும் (புறம்·275) தெரியலாகும். இதனால் 'இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்' என்ற தொல்காப்பியவிதிப்படி (எழுத். 317), ஒரூஉத்தன்தந்தை=ஒரூஉத்தந்தை என்றிணைந்து அதுவே ஒருதந்தை எனப் பிற்காலத்து மாறியதுபோலும் என்று கருதற்கும் இடமுண்டு.

சுற்றிப் பொருள் கொள்ளவும் கொள்ளினும் குறைகள்தோன்றவும் வேறுமுறையில் அமைத்துக்கூறாராதலால், அத்தொடர்க்கு அரும்பத வுரையாசிரியர் கூறிய பொருளே பெரிதும் அமைவுடையதாதல் தேற்றமாகும்.

பொறையன்பெருந்தேவியைப் பெற்றவனே 'ஒருதந்தை' எனப் பட்டவனாயின், ஏனையிடங்களிற்போல அத்தந்தைபெயரைப் பதிக வாசிரியர் கூறாதுபோகாராதலால் அது பொருந்தாதெனின், பிறர்கூறு மாறு அந்துவற்கு ஒருதந்தை என்றியைக்குமிடத்து, ஆண்டும் அத் தந்தைபெயர் காணப்படாமையால் அதுவும் பொருந்தாதாகும். மரு மக்கட்டாயப்படி அரசியலில் உரிமை பதவிகளுடைய கோத்தாயை அடியோடு மறந்த அவ்வாசிரியர், அவையில்லாத தந்தையை 'ஒரு' என்பதனால் அவனதொப்பின்மைகூறி விசேடித்தனர் எனல் அத்தாய முறைக்கு அமைவுடையதுமன்று. 'ஒரு' என்பதற்கு 'ஒப்பற்ற' என்பதன்றி வேறுபொருள் கூறுவதாயின, அஃது அத்தந்தையின் பிர சித்தமற்றநிலையையே காட்டுவதாகும். அந்நிலைமை யாவர்க்கும் வெளி யாகத் தந்தையை இழுத்துவைத்து இழிப்பதினும் அவனொருவனைக் கூறாதுவிட்டிருப்பதே மேலாகும். இவற்றால், பதிற்றுப்பத் துரை யாசிரியர்கூறியபடி, பொறையன்பெருந்தேவியின்பிதாவையே அவ்வொரு தந்தை என்பதனால் பதிகவாசிரியர் குறித்தனர் என்பது தேற்றமாம். ஆகவே 'அந்துவன்' என்ற சொற்கு, ஒப்பற்றதந்தையாற் பெறப்பட்ட வளும் பொறையன்பெருந்தேவி என்று அழைக்கப்பெற்றவளுமாகிய மனைவியிடம் பிறந்தமகனே செல்வக்கடுங்கோ என்பது எல்லாவழியாலும் பதிகவாசிரியர்கருத்தாதல் கண்டுகொள்க.

'அந்துவற்கு.........பொறையன்பெருந்தேவி யீன்றமகன்' என்ற தொடருள் 'பொறையன்' என்பது சேரன் என்னும் பொருளது. 'சேரன் பொறையன் மலையன்' (சிலப்.) என்ப. அப்பொறையன் அத்தொடர் முன்னிற்கும் அந்துவனின் வேறல்லன்.

"உடையார் ராஜராஜதேவர்க்கு நம்பிராட்டியாரான சோழமாதேவியார்"
(S. I. I, II 170, 178)

"சோழபெருமானடிகள்தேவியார் வளவன்மாதேவியார்"
(S. I. I, V. 221)

என்பனபோன்ற தொடர்களைச் சாசனங்களில் மிகுதியுங் காணலாம். இவற்றுள் சோழமாதேவியார், வளவன்மாதேவியார் என்பவற்றிலுள்ள சோழனும் வளவனும் முறையே ராஜராஜன், சோழபெருமானடிகள் என்ற வேந்தரின் வேறல்லர். அத்தகையதொன்றே 'அந்துவற்கு... பொறையன்பெருந்தேவியீன்ற' என்ற தொடரில்வரும் 'பொறையன்' என்பதும். மேற்காட்டிய சோழமாதேவி, வளவன்மாதேவி போலவே 'பொறையன்பெருந்தேவி' என்பதும் ஒருபெயரோது என்று முன்கூறிய என்கருத்து இதனாலும் வலியுறுவதாம். இவற்றால், மருமக்கட்டாயமுறை கொள்வதற்கு எவை பெரிதும் அனுகூலமுடையனவாகக் கருதப்பட்டனவோ, மகன் மகள் தந்தை மைந்தன் என்பனவும் எவற்றின்பொருட்டு வலிந்து பொருள்கொள்ளப்பட்டனவோ அத்தகைய தேவி, வேண்மாள் என்ற சொற்கள் முடிவாக மக்கட்டாயத்துக்கே பரமானுகூலஞ்செய்வனவாக அமைந்தமை கண்டுகொள்க.

இனி, ஐந்தாம்பத்துப் பதிகத்துள், செங்குட்டுவனை—"சேரலாதற்குச் சோழன்மணக்கிள்ளி ஈன்ற மகன்" என்று பதிகவாசிரியர் கூறுகின்றார். சேரற்குக் கிள்ளியாகிய ஆண்பால் மகப்பெறுதல் அசம்பாவிதமாகலின், ஏனைத்தொடர்களிற்போல, மணக்கிள்ளியை அடுத்திருந்த 'தேவி' என்றசொல் குறைந்ததாதல்வேண்டும் என்று மருமக்கட்டாயங் கூறுவோர் கருதுவர். இக்கருத்துப் பொருந்துவதேயாயினும், அக்குறைச்சொல் அவர்கருத்துப்படி தேவியேயாகவேண்டும் என்னும் நியதியில்லை. இப்பதிகத் தொடர்ப்பொருளை ஐயமின்றித் தெளிதற்கு வேறு ஆசிரியரின்கூற்றுக்கள் பேருதவியாகவுள்ளன. அவ்வாசிரியருள் ஒருவர் அப்பதிகப்பத்தின் தலைவனை கோச்சோழனுடன் பிறந்த இளங்கோ ஆவர். இவர்கூற்று அப் பிற்பட்ட பதிகவாசிரியர்கூற்றினும் உண்மையும் உயர்வுமுடையதென்பது சொல்லவேண்டாதது. மற்றொருவர் அடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்திற்குப் பேருரையிட்ட அடியார்க்குநல்லார் என்பார். இவருள், இளங்கோவடிகள்—

"குமரியொடு வடவிமயத்
தொருமொழி வைத்துலகாண்ட
சேரலாதற்குத் திகழொளிஞாயிற்றுச்
சோழன்மக ளீன்ற மைந்தன்
செங்குட்டுவன்" (சிலப். 29)

என்று கூறுகின்றார். இங்ஙனம் அச்சோனுடன்பிறந்தவரே கூறுதல் 'சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளியீன்றமகன்' என்ற ஐந்தாம்பதிகத் தொடர்ப்பொருளை அங்கைநெல்லிபோல் விளக்கக்கூடியதன்றோ? 'சேரலாதற்குச் சோழன்மகளீன்ற மைந்தன்' என்று தம் தமையன்பிறப்பை அடிகள் தெளிவாகக் கூறியதனால், அப்பதிகத்தொடரும் சோழன்மகளீன்றபுதல்வனே செங்குட்டுவன் என்றபொருளில் வழங்கியதாகவேண்டுமென்பது பெறப்படத் தடையில்லை. அதனால் அப்பதிகத்துள் மகண்முறை குறிக்கும் ஒரு சொல்லே மணக்கிள்ளியை அடுத்திருந்து விடுபட்டதாதல்வேண்டும் என்பது தெரியலாம். அக்குறைச்சொல் இன்னதென்பதனை அடியார்க்குநல்லார் குறிப்பித்தல் அறியத்தக்கது. அவர், சிலப்பதிகாரப் பதிகவுரைத் தொடக்கத்தே—

"குமரியொடு வடவியமத்
தொருமொழிவைத் துலகாண்ட
சேரலாதற்குத் திகழொளிஞாயிற்றுச்
சோழன்மகள் நற்சோணையீன்ற
மக்களிருவருள்"

என்று கூறுகின்றார். இதனால் மணக்கிள்ளி என்பதனையடுத்து 'நற்சோணை' என்றபெயர் இருந்து குறைபட்டதென்பதும் அந்நற்சோணை சோழன் மகளே என்பதும் பெறப்படுதல் தெரியலாம். இதுவே அக்குறைச்சொல்லாதல்வேண்டும் என்பதனை—"இக்கதையை (செங்குட்டுவனிளங்கோ வரலாற்றை) பதிற்றுப்பத்தினும் அஞ்சாம்பத்தின் முடிவின்கண் 'வடவருட்கும்' என்ற கவியுள்ளும்............காண்க" என அடியார்க்குநல்லார் ஆங்கே பின்னும் எழுதியுள்ளசெய்தி வலியுறுத்துவதாம். 'வடவருட்கும்' என்ற கவியாவது—"சேரலாதற்குச்சோழன் மணக்கிள்ளியீன்ற"என மேற்குறித்த தொடரமைந்த பதிற்றுப்பத்துப்பதிகமேயாம். ஆகவே 'மணக்கிள்ளிதன்மகள் நற்சோணையீன்ற' என்று தொகாநிலையாகவோ, 'மணக்கிள்ளிநற்சோணையீன்ற' என்று தொகைநிலையாகவோ ஆதியிலிருந்ததொடரே 'மணக்கிள்ளியீன்ற' என இடையில் மாறியதாயிற்று என்பதும், பாட்டுடைச்சேரரின் தாயர்பெயரை அத் தாயரைப்பெற்ற தந்தையர்பெயருடன் சேரவைத்துக்கூறுவதே பண்டையோரெல்லாங் கொண்டுவழங்கியமுறை என்பதும் நன்குபெறப்படுதல் கண்டுகொள்க. பிற்கூறிய முறையை—

"தெங்கநாடுகிழவன்றன்மகள் ஆய்குலமாதேவியான முருகஞ்சேந்தி"
(T. A. S. I. 17)

"பழியிலி சிறியநங்கை" "பராந்தகன் குந்தவை" (Ibid. I. 156)

"ஆதிச்சனுமையம்மை" (Ibid. III, 3)

எனப் பிற்காலத்துச்சாசனங்களிலும் காணலாம். முருகன்மகள் சேந்தி, சாத்தம்பழியிலி என்பான்மகள் சிறியநங்கை, பராந்தகன்மகள் குந்தவை, ஆதிச்சன்மகள் உமையம்மை—என இக்கோமகளிர்பெயர் விரிதல் காண்க. பதிகங்கள்—

"உதியஞ்சேரற்கு வெளியன்வேண்மாள் நல்லினி ஈன்ற மகன்"

"சேரலாதற்கு வேளாவிக்கோமான் பதுமன்றேவி ஈன்ற மகன்"

என்று கூறுவனவற்றுள்—'உதியஞ்சேரற்கு' 'சேரலாதற்கு' என்பவற்றால் பாட்டுடைச்சேரர் பெருவேந்தரைத் தம் தந்தையாக உடையர் என்பதும், நல்லினி, பதுமன்றேவி என்பவற்றால், அவர் தாயர் இன்னாரென்பதும், வெளியன், வேளாவிக்கோமான் என்பவற்றால், அத்தாயர், வேந்தரின்காதற்கிழத்தியர்போற் குலத்தாழ்வுடையரன்றிப் பேரரசற்கு மகட்கொடைக்குரிய உயர்குலத்து வேளிர்செல்வியர் என்பதும், 'ஈன்றமகன்' என்பவற்றால், இவ்வாறு தந்தைவழியாலும் தாய்வழியாலும் மாசுமறுவற்று உத்தமகுலத்தவரான அவ்விருவர்க்கும் ஔரஸ புத்திரராக உதித்தவரே பாட்டுடையார் என்பதும் அழகுற விளக்கப்பட்டவாறு காண்க இவ்வாறு இருவழியாலும் அரசரைப் பெருமைப்படுத்துக் கூறல் பழைய மரபென்பதனை—

" தண்ணங்குருகூர்ச் சேயிருமாமரபுஞ் செவ்வியான் " (சடகோபரந்தாதி)
எனச் சடகோபரைக் கம்பநாடரும்,

" திங்களி னிளங்குழவி செம்மலிவ னென்றுஞ்
செய்யபரு திக்குழவி யையனிவ னென்றுந்
தங்களின் மகிழ்ந்திரு குலத்தரசர் தாமுந்
தனித்தனி யுவப்பதோர் தவப்பயனு மொத்தே "

என அபயனாகிய முதற்குலோத்துங்கசோழனைச் செயங்கொண்டாரும்,

"இன்னற் பகைவ னிவன்கா ணகளங்க
மன்னர்க்கு மன்னன் மகனென்பார்—முன்னர்
முதுகுல மன்னர் முடிவணங்க வந்த
விதுகுல நாயகிசே யென்பார்" (குலோத். உலா. 221-2.)

என அனபாயனாகிய இரண்டாங்குலோத்துங்கனைக் கூத்தரும் ஆகிய கவிச்சக்கரவர்த்திகள் மூவரும் பாடுதலால் அறியலாகும். இத்துணையுங் கூறியவற்றால், பதிற்றுப்பத்தின் பாட்டுடைச்சேரர் பிற உயர்குடித் தாயர் வழியில் உதித்த உரிமைநன்மக்கள் என்பதே அந்நூற்பதிகவாசிரியர் கருத்தாம் என்பது நிலைநாட்டப்பட்டது. இக்கருத்தை வலியுறுத்தும் பிறபிரமாணங்களை இனி யெடுத்துமொழிவேன்.

## IV. மக்கட்டாயமுறையை வலியுறுத்தும் பிற சான்றுகள்.

[சேரர்மனைவியரே அரசுக்குரிய தேவியராதல்.]

(1) பெருந்தேவி, கோப்பெருந்தேவி, பெருங்கோப்பெண்டு முதலிய சிறப்புப்பெயர்கள், அரசரின் பட்டமகிஷியர்க்கன்றிப் பிறர்க்குவழங் காப்பெற்றிய வென்பது—

"பாண்டியன் பெருந்தேவி" (சிலப். 20, 19)

"கோவீற் றிருப்புழிப் பூவீற் றிருந்த
திருமகள் போல வோருமையி னெட்டி
உடன்முடி கவித்த கடனறி கற்பின்
இயற்பெருந்தேவி" (பெருங்கதை, 2, 4, 21-5)

"கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்பு
யாப்புறவில்லை" (சிலப். 16, 21)

"கோப்பெருந்தேவி" (பெருங். பக். 64, 119, 143, 219)

"பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்" (சிலப். 25, 86)

"பூதப்பாண்டியன்றேவி பெருங்கோப் பெண்டு" (புறம்-246)

"கோப்பெருங் கிழவோள்" (பெருங். 3, 11, 48.)

என்பன முதலியவற்றால் அறியலாம். மருமக்கட்டாயமே தமிழகத்தின் பண்டைமரபாயின், அம்முறையிற் சேரர்மனைவியர் காமக்கிழத்தியர் போன்ற நிலையினரேயாதலின், அரசுரிமைக்குரிய அவர் சகோதரியரே மேற்கூறிய சிறப்புப்பெயர்கட்கு உரியராதல்வேண்டும். அம்முறைமாறிச் சேரர்மனைவியர் அப்பெயர்களாற் சிறப்பிக்கப்படின் அஃது அத்தாய

முறைக்கு முற்றும் விரோதமென்னத் தடையில்லை; என்னை? "கோவீற் றிருப்புழி..................உடன்முடிகவித்த கடனறிகற்பி னியற்பெருந் தேவி" எனப்படுதலாலும், அந்நிலை சோசகோதரியர்க்கு அமைவதன்றாத லாலும் என்க. எனவே,

"ஒக்க வபிடேகஞ் செய்யு முரிமைக்கட்
டக்க தலைமைத் தனித்தேவி"

(குலோத்துங்கசோழனுலா, கண்ணி-71.)

என்றபடி உரிமை பதவிகளுடைய பட்டமஹிஷியர்க்கே மேற்கூறிய பெயர்வழக்குக்கள் அமைவனவென்பது சொல்லவேண்டாதது. அம் முறையிற் சேரன்செங்குட்டுவன்மனைவியை அவனிளவலான அடிகள்—

"கோப்பெருந்தேவி,
வால்வளை செறிய வலம்புரி வலனெழ
* * * * *
வஞ்சியுட் புகுந்தனன் செங்குட் டுவனென்"

(சிலப். 27. 251–5)

எனக் கூறுதலும், சோமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை யின்மனைவியைப் 'பெருங்கோப்பெண்டு' என முன்னோர்வழங்குதலும் (புறம்-245), அந்துவன்சேரலின்மனைவியைப் 'பொறையன்பெருந்தேவி' யெனப் பதிற்றுப்பத்துப் பதிகங் கூறுதலும் ஈண்டு அறியத்தக்கன. செங்குட்டுவன் வடநாடுசென்றபோது அவன் தேவியான இளங்கோ வேண்மாள் கொண்டிருந்த பிரிவாற்றுநிலையையும், அவன் தன்னாடு நோக்கிவருகின்றசெய்தி அறிந்ததும், அவ்வேண்மாளின் ஆயச்செவிலிய ரும் சேரநாட்டு நால்வகைநிலத்துமகளிரும் அவள் வருத்தநிலைநீங்கு மாறு உவந்துகூறிய மகிழ்ச்சியுரைகளையும் இளங்கோவடிகள் கூறும் சிறப்பினை நோக்குமிடத்து, 'வதுவை வேண்மாண் மங்கல மடந்தை' யாகிய அப் பெருந்தேவியைக் காமக்கிழத்தியர்நிலையினும் அதிக் கௌர வம்பெறாத மருமக்கட்டாய மனைவியென்றுகூறவும் அறிஞர் ஒருப்படுவ ரோ? செங்குட்டுவன் தன் பெரும்புகழை ஐந்தாம்பத்தாற் பாடிய புலவர்பெருமானான பரணர்க்குத் தன்மகன் குட்டுவஞ்சேரலையே தா னளித்தற்குரிய பெரும்பரிசிலாக வழங்கினன் என்று அப்பத்தின்

பதிகம் கூறுகின்றது.* மருமக்கட்டாயப்படி அரசியலில் உரிமை பதவிபற்ற மகனொருவனைத் தன்னைப்பாடிய புலவர்க்கு உத்தமப் பரிசிலாக அளித்தான் என்பது, எவ்வாறு அப்பரிசிலைச் சிறப்பித்துக் காட்டும்? சிறந்துகாட்டவேண்டின் தன்னுரிமைக்குரிய மருகனையன்றோ அவன் அவர்க்கு வழங்கியிருத்தல்வேண்டும். 'தன்னிடமிருந்து நிலை தவறிவாழ்வதினும், புலவரையண்டியேனும் புகழ்பெறுக' என்று கருதிப் பாணரிடம் செங்குட்டுவன் தன் பதவிபற்ற மகனைச் சேர்த்தனன் கொல்! இவற்றால் பெருந்தேவி, கோப்பெருந்தேவி, பெருங்கோப் பெண்டு என்பவை, முறையே அந்துவன், செங்குட்டுவன், மாக்கோதை என்பவரின் திருநிலக்கிழமைத் தேவியரே† என்பதும், பாணர்க்குப் பரிசிலாக அளிக்கப்பட்ட குட்டுவஞ்சேரல், செங்குட்டுவனது அரசுக்குரிய பெருமகனே என்பதும் நன்கறிந்துகொள்க. இங்ஙனம் சேரர் பெருந்தேவியரின் திருவயிறுவாய்த்த செல்வமக்களே அவருரிமை பதவிகட்கு உரியராகவிளங்கியவர் என்பதனைப் பதிற்றுப்பத்து ஆசிரியர்களே ஐயந்திரிபற விளக்கிச்செல்லுதலை இனிக் கூறுவேன்.

[சேரர்மனைவியர் அரசுக்குரிய புதல்வரையுடையராதல்.]

(2) ஒன்பதாம்பத்துக்குரிய இளஞ்சேரலிரும்பொறை, பெருஞ் சேரலிரும்பொறையை அடுத்துப் பட்டம்பெற்றவன் என்பது மருமக்கட் டாயங் கூறுவோர்க்கும் ஒத்ததே. அவர்கருத்தின்படி, அவ்விளஞ் சேரல் பெருஞ்சேரலின் மருகனாதல்வேண்டுமன்றோ? பெருஞ்சேரலைக் கூறுமிடத்தே அரிசில்கிழார் என்ற பெரும்புலவர்—

"ஒடுங்கீ ரோதி யொண்ணுதல் கருவின்
எண்ணியன் முற்றி யீரறிவு புரிந்து
சால்புஞ் செம்மையு முளப்படப் பிறவும்
காவற் கமைந்த வரசுதுறை போகிய
வீறுசால் புதல்வற் பெற்றனை" (74, 17-21)

* இங்ஙனம் மகனைப் பரிசளித்தான் செங்குட்டுவன் என்பது, பாணரிடம் கற்றுவல்லனாம்படி அம்மகனைக் குருகுலவாஸஞ்செய்ய நியமித்ததையே குறிக்கும்.

† மணிமேகலை, 23, 4.

என்று பாடுதல் காணலாம். "தன் கற்புடைமனைவியின் கருவிலே உத்தம குணங்களும் உலகபரிபாலனத் திறமையுமுடைய பெருமைதங்கிய புதல்வனை நீ பெற்றுச் சிறந்தனை" என்று அவர் புகழ்தல் ஈண்டு அறியத்தக்கது. 'ஒண்ணுதல்' என்பதனால் கற்புடைத் தேவியையுடையன் சேரன் என்பதும், அவள் 'கருவிற்புதல்வற்பெற்றனை' என்பதனால், அம்மனைவியிடம் தனக்கு ஔரஸபுத்திரனை அவன் அளித்தவன என்பதும், 'காவற் கமைந்த வரசுதுறை போகிய' என்பதனால், அப்புத்திரன் தந்தையின் அரசுரிமையெய்தற்குரிமையுடையன் என்பதும், 'வீறுசால் புதல்வன்' என்பதனால், தன்னாட்டினை முன்னோர்க்கிருந்த அறிவு திரு ஆற்றல்களுடன் ஆளவல்ல மகன் என்பதும் மிக அழகாகக் குறிக்கப்பட்டிருத்தல் காண்க. இவ்வாறு சிறப்பிக்கப்பட்ட புதல்வன், பெருஞ்சேரலின்பின் பட்டமெய்திய இளஞ்சேரலே என்பதும், அவனைப்பெற்ற தாய் மையூர் கிழான்மகள் அந்துவஞ்செள்ளை என்பதும் பதிற்றுப்பத்துப் பதிகத்தால் நன்கறியப்பட்டவை. மகன்முதலியசொற்களுக்குக் கூறியவாறு, புதல்வன் என்பதற்கு மருமக்கட்டாயத்தின்படி வேறு புதுப்பொருள் கற்பிக்க ஈண்டு இடமில்லை. தன் 'ஒண்ணுதல் கருவிற் புதல்வற்' பெறுபவன் தந்தை எனப்படுதற்கு உரியனேயன்றிப் பிறனாகாமை தெளிவு. பிறனாகக்கொள்ளின், உரைக்கத்தகாத பெரும்பழி எய்தலின் அஃது அடாததாம். நல்லினி, பதுமன்றேவி, அந்துவஞ்செள்ளை முதலியோரைச் சேரசகோதரியாக முடிவுசெய்துகொண்டு, அச்சோதரியரைச் சோதரருடன்சேர்த்துப் பழிவிளைத்துவிட்டதாகக்கருதி அதற்குப் பரிகாரந்தேடப்புக்கோர், சேரர்மனைவியராயினாரை அவர் தந்தையருடன் சேர்த்துச் சேரவமிசத்துக்கே உண்மையிற் பழியுண்டாக்கிவிட்டது பெரியதோர் விபரீதமாகமுடிந்தமை காண்க.

இங்ஙனம், பெருஞ்சேரலின்மகனே இளஞ்சேரல் என்று அரிசில் கிழாரால் ஐயத்துக்கிடமின்றிப் பாடப்பட்டவாறே, அப்பெருஞ்சேரலின் தந்தை செல்வக்கடுங்கோவாழியாதனை—

"வேள்வியிற் கடவு ளருத்தினை கேள்வி
உயர்நிலை யுலகத் தையரின் புறுத்தினை
வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கட னிறுத்த வெல்போ ரண்ணல்" (பதிற். 70, 18-22)

என, நல்லிசைப்புலவரான கபிலரும், சேரலாதன்மக்களுள் ஒருவனான ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை—

"இளந்துணைப் புதல்வர் நல்வளம் பயந்த
வளங்கெழு குடைச்சூ லடங்கிய கொள்கை
ஒண்ணுதல் மகளிர் துனித்த கண்ணினும்
இரவலர் புன்க ணஞ்சும்
புரவெதிர் கொள்வனை" (பதிற். 57, 10–15)

எனக் காக்கைபாடினியார் நச்செள்ளையாரும் பாடுதல் காணலாம். இப்புலவர்கூற்றுக்களால், செல்வக்கடுங்கோவுக்கும் ஆடுகோட்பாட்டுச்சேரலாதற்கும் இவ்விருபுதல்வர் இருந்தசெய்தி அறியப்படும். 'ஒருமாமுந் தோப்பில்லை, ஒருமகனும் மகனில்லை' என்ற மூதுரைப்படி, 'இளந்துணைப் புதல்வர்நல்வளம்பயந்த' என்று சேரமாதேவியர் சிறப்பிக்கப்பட்டாரென்க. மருமக்கட்டாயமாயின், அரசியற்குரிமையுடைய மருகரையன்றோ புலவர்கள் அவ்வாறு புகழ்ந்துரைத்தல்வேண்டும்? அவரை அடியோடுமறந்து புதல்வரையே 'வணங்காவாண்மையுடையர்' என்றும், அவரைக்கொண்டு முதியரைப் பேணித் தொல்கடனிறுத்தவன் தந்தை என்றும், அப்புதல்வர் 'காவற்கமைந்த அரசுதுறைபோகிய வீறுசான்றவர்' என்றும் நல்லிசைப்புலவர்கள் நயமுறப்பாடவும் ஒருப்படுவரோ? ஆகவே மக்கட்டாயமே தேற்றமாதல் கண்டுகொள்க.

[சேரரின் வேறொருகிளையினரும் மக்கட்டாயமும்]

(3) அதிகமான்கள் என்ற தமிழ்த்தலைவர் சேரர்கிளையினருள் ஒருவராவர். இச்செய்தி—சேரர்க்குரிய பனந்தோட்டுமாலை இவ்வதிகர்க்கும் உரியதாக முன்னோர்கூறுதலாலும், "இவனுக்குப் பனந்தார்கூறியது சேரமாற்கு உறவாதலின் ('உதியவேந்தாதலின்' என்றும் பிரதிபேதம்)" என்று புறநானூற்றுரைகாரர் எழுதிச்செல்லுதலாலும், பிற்காலத்தில் விளங்கிய இம்மரபினர்—"வஞ்சியர் குலபதி எழினி" "சேரமானார் வமிசத்து அதிகமான் எழினி"* என்று தம்மைக்கூறிக்கொள்ளுதல் சாஸனங்களிற் காண்டலாலும் விளக்கமாம். இவ்வதிகமான்குலத்து நெடுமானஞ்சி என்பானுக்கும் பெருஞ்சேரலிரும்பொறைக்கும் தாயநாடாட்சி

*"ஸ்ரீமத் கேரள—பூப்ருதா யவனிகா நாம்நா" என்பது இதன் வடமொழிப்பகுதி. (S. I. I. i, 107.)

பற்றித் தகடூர் என்ற களத்திற் பெரும்போர்மூள, அதனில் அவ்வஞ்சி கொல்லப்பட்டான். இவ்வாறு அதிகன்மரபோர் சேரர்கிளையினர் என்பது தெளியப்படுதலின், சேரர்க்குரிய தாயமுறை முதலிய வழக்க ஒழுக்கங்களையே அம்மரபினரும் கொண்டிருந்தவர் என்னத் தடையில்லை. அம்முறை மருமக்கட்டாயமன்றி மக்கட்டாயமேயாதல் அறியத்தக்கது. அதிகமான் நெடுமானஞ்சி வேறுபோரொன்றன்கண்ணே மூண்டுநின்றகாலத்தில் தனக்குத் தவமகன் பிறந்தான் என்ற செய்தி தெரிந்து, அப்போரினிடையே தன்மகவைக் காணச்சென்றுவந்தான் என்ற செய்தி நல்லிசைப்புலவரான ஒளவையார் திருவாக்கால் (புறம்—100) அறியலாம். 'சோலாதற்குப் பதுமன்றேவியீன்ற மகன்' முதலிய தொடர்களில், மகன் என்பது வழித்தோன்றலையே குறிக்குமென்று வாதிப்போர், ஈண்டுத் தனிநிற்கும் 'மகன்' என்பதற்கு எவ்வாறு பொருள்கொள்வரோ? தவமகன் பிறந்தானே எனவரும் புறநானூற்றுத் தொடரால், அம்மகன் தன்வழிவளர்த்தற்குரியனாகத் தன் தேவியிடம் அதிகன்பெற்ற புதல்வனே என்பது பெறப்படும். அப்புதல்வன், அதியமான் அஞ்சிக்குப்பின் அவனரசுரிமையெய்திய பொகுட்டெழினி என்பது ஒளவைவாக்கானே (புறம்—96) அறியக்கிடக்கின்றது. ஆகவே, மக்கட்டாயமே சேரர்க்கும் சேரர்கிளையினர்க்கும் உரிய பழையமுறையாதல் கண்டுகொள்க.

### [இளஞ்சேரலிரும்பொறையின் தாய்ப்பாட்டன்]

(4) பெருஞ்சேரலின்பின் பட்டமெய்திய இளஞ்சேரலிரும்பொறையைக் குறிக்கும் பதிகத்தொடருள்—

> "குட்டுவனிரும்பொறைக்கு மையூர்கிழான்வேண்மாள்
> அந்துவஞ்செள்ளை ஈன்ற மகன்"

என்ற தொடர் வருகின்றது. அந்துவஞ்செள்ளை என்பது அந்துவற்கு மகளான செள்ளை என்று விரிந்து பொருள்பயக்கும். பண்டை நல்லிசைப்புலமை மெல்லியலார்களை—

> "பெருங்கோழிநாய்கன் மகள் நக்கண்ணையார்" (புறம்)
>
> "அஞ்சிலாந்தையார் மகள் நாகையார்" (அகம்)

என்று இன்னார்மகள் என்பது விளங்க விரித்துக்கூறுதல்போலவே,

"பொதும்பிற் புல்லாளங்கண்ணியார்" (அகம்- )

"கழாஅர்க் கீரனெயிற்றியார்" (நற். 44)

என மூன்னோரும்; மாறம்பாவை, நக்கன்கொற்றி, பராந்தகன் குந்தவை எனப் பின்னோரும் அப்பொருள்படத் தொகுத்துக் கூறுவதும் பண்டை மாபாதல் காண்க. பிற்காலத்துக் கேரளநாடாண்ட ஸ்ரீவல்லவன் கோதை என்ற அரசன்றேவிக்கு 'ஆதித்தனுமையம்மை' என்பது பெயர். இதுவும் ஆதித்தன்மகள் உமையம்மை என்ற பொருளினதென்பர். இவைபோன்றதே அந்துவஞ்செள்ளை என்பதும். அந்துவஞ் சாத்தன் என்ற ஒட்டியற்பெயர் (புறம்), அந்துவனுக்கு மகன் சாத்தன் என்றுத லும் ஒப்பிடுக. செள்ளை என்பது பெண்பாலார்க்கு வழங்கிவந்த பழைய இயற்பெயராதல் காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்ற பண்டைப் பெண்புலவர்நாமத்தாலும் அறியத்தகும். அந்துவஞ்செள்ளை என்ற தொகைமொழியுள் அந்துவன் என்பது செள்ளையின் தந்தையைக் குறிப்பதாம். ஆகவே இளஞ்சேரலிரும்பொறையின் தாயைப்பெற்ற பாட்டன் அந்துவன் என்ற இயற்பெயரினனாதல் தெரியவரும். ஆயின், மருமக்கட்டாயப்படி, இளஞ்சேரலின் தாயான செள்ளையையும் பெருஞ் சேரலிரும்பொறையையும் பெற்றவன் பொறையன் என்ற வேள் ஆகின் றான். அப்பொறையன் மகளே செள்ளையாயின், பண்டை வழக்குப்படி அவள் 'பொறையஞ்செள்ளை' எனற்குரியளேயன்றி அந்துவஞ் செள்ளை எனப்படாள். அதனால், மருமக்கட்டாயமுறையில், தாய்ப் பாட்டன்வழி பெயர்மலைவுகொண்டு இயையாமை கண்டுகொள்க.

மேற்குறித்த தொடரையே மக்கட்டாயப்படி நோக்குமிடத்து, 'பெருஞ்சேரலிரும்பொறைக்கு மையூர்கிழான்வேண்மாளாகிய அந்துவஞ் செள்ளையிடம் பிறந்த மகன் இளஞ்சேரலிரும்பொறை' என்பது பொரு ளாகும். அந்துவன்மகள் செள்ளை என்றபொருளில் வந்த அந்துவஞ் செள்ளை என்ற தொகைமொழி 'மையூர்கிழான்வேண்மாள்' என்ற சிறப் பியற்பெயருடன் கூடி இருபெயரொட்டாய்—அச்செள்ளையின் தந்தை இன்னான் என்பதனையும், அத்தந்தை வேளிர்குடியினன் என்பதனையும், அவ்வுயர்குடிப்பிறப்பினளே அச்சேரமாதேவி என்பதனையும் ஒருங் குணர்த்திநிற்பது. வேள்-ஆயின் குலத்தவனாய் 1000 ஆண்டுகட்கு முன் ஆண்ட விக்கிரமாதித்திய வரகுணன் என்பான் தேவியை—

"தெங்கநாடு கிழவன் றன்மகள்
ஆய்குலமாதேவியான முருகஞ்சேந்தி"

என்று அவன்சாஸனங் கூறுதல் ஈண்டு ஒப்பிடத்தக்கது. இதனுள் முருகஞ்சேந்தி என்பதற்கு முருகன்மகள் சேந்தி என்பது உறுப்புப் பொருளாம். ஆயின், தெங்கநாடுகிழவன் என்று சேந்தியின் தந்தை வேறாகக் கூறப்பட்டனனே எனின் அத் தெங்கநாடுகிழவன் பின் வரும் முருகனின் வேறாகக் கருதத்தக்கவனல்லன்; என்னை? "தெங்க நாடுகிழவனாயின முருகன்" என அவன் இயற்பெயர் முருகனே என் பதைத் தெளிவாகச் சாஸனங்கூறுதலின் என்க. இவ்வாறே, ஆண் மக்கள்பெயரும் வழங்குவதுண்டு என்பது 'செல்லூர்கிழார்மகனார் பெரும்பூதங்கொற்றனார்' (அகம்–250) மாற்றூர்கிழார்மகனார் கொற் றங்கொற்றனார் (ஷை–54) என்பனபோன்றவற்றால் அறியலாம். இவற் றுள் தெங்கநாடுகிழவன், செல்லூர்கிழார், மாற்றூர்கிழார் என்பன தந்தையரின் குடிப்பெயர்கள் என்பதும், முருகஞ்சேந்தி, பெரும்பூதங் கொற்றனார், கொற்றங்கொற்றனார் என்ற தொகைமொழிகளுள், முருகன், பெரும்பூதன், கொற்றன் என்பன அத்தந்தையரின் இயற்பெயர்கள் என் பதும், அவ்வியற்பெயர்கள் மக்கள்பெயருடன் இணைக்கப்பட்டுவிட்டமை யின் அவைநீக்கித் தெங்கநாடுகிழவன், செல்லூர்கிழார், மாற்றூர்கிழார் என அத்தந்தையர் குடிப்பெயர் விளக்கக்கூறப்படுகின்றனர் என்பதும் நன்கறியலாம். அவைபோலவே சேரமாதேவிபெயரான அந்துவஞ்செள்ளை என்பதனுள், அந்துவன் என்பதனால் செள்ளையின் தந்தைபெயர் பெறப் பட்டமையின் அதனைவிலக்கி, மையூர்கிழான் என அவன் குடிப்பெய ரைக் குறித்து, அவற்குப்பிறந்த வேள்குலமகள் என்பது போதர 'மையூர்கிழான் வேண்மாள் அந்துவஞ்செள்ளை' எனத் தொகைநிலைத் தொடராகப் பதிகவாசிரியரால் அத்தேவி கூறப்பட்டாள் என உணர்க.

[தொல்காப்பியனார்கருத்தும் மக்கட்டாயமே.]

(5) மருமக்கட்டாயமுறை பிறர்கருத்தின்படி பழமைபானதன்றி முன்னோர் அறியாததொன்று என்பதனைக்கூறி இத்தாயவழக்கை ஒரு படியாக முடிக்கின்றேன். தமிழகத்தின் பழையவழக்கே மருமக்கட்டாய மாயின், பதிற்றுப்பத்தொழிந்த ஏனைச் சங்கச்செய்யுட்களேனும் அவற் றுக்கும் முற்பட்ட தொல்காப்பியமேனும் அச்சிறப்புடை வழக்குண்மை

யைக் குறிப்பிடவும் தவறுமோ? மாமனுக்குப்பின் மருகனே அடைந்து வரும் உரிமைமுறை ஒருசார்தமிழ்மக்களின் பெருவழக்காம்போது "வடவேங்கடந் தென்குமரியாயிடைத், தமிழ்கூறுநல்லுலகத்து வழக்குஞ் செய்யுளு"மே கூறப்புக்க ஆசிரியர் தொல்காப்பியனுர் மாமன் மருகன் என்ற சொற்களை எடுத்தாளுதலாலேனும் அத்தகைய வழக்குண்மையைக் குறிப்பிக்கவேண்டியவரல்லரோ? தந்தையொடு மக்கள்பெயரிணையும் ஒட்டியற்பெயர்வழக்கிற்கு எழுத்ததிகாரத்துள் 347-முதல் 351-வரையுள்ள சூத்திரங்களில் விதிகூறிவிளக்கிய அவ்வாசிரியர், மாமன் மருகரிணையும் தொகைமொழிவழக்கிற்கும் விதிகூறி வகுத்துக்காட்ட வேண்டாவோ? அச்சூத்திரங்களுள்,—

"அப்பெயர் மெய்யொழித் தன்கெடு வழியே
நிற்றலு முரித்தே யம்மென் சாரியை
மக்கண் முறைதொகூஉம் பெயர்வயி னான"

என்பதும் ஒன்று. தந்தைபெயர்க்குப்பின் மக்கள்பெயர் வருமிடத்து அத் தந்தைபெயரின் ஈற்றிலுள்ள 'அன்' இயல்பாதலேயன்றி, அது கெட்டு 'அம்' ஆதலும் உண்டு—என்பது இச்சூத்திரக்கருத்து. ஈண்டு மக்கள் என்றது தந்தைபரைநோக்கி வந்ததேயாகும். 'தந்தையரொப்பர் மக்கள்', 'கிழவனுங் கிழத்தியும்...............................மக்களொடு துவன்றி' எனப் பிறண்டும் ஆசிரியர் இந் நோக்கத்துடன் கூறுதல் காண்க. மகன், மகள் என்ற இருபாலாரும் அடங்க ஆசிரியர் 'மக்கண் முறைதொகூஉம்' என்றார் என்க. மக்களின் இயற்பெயர் 'தந்தை' என்ற சொல்லையும் தந்தையின் இயற்பெயரையும் முன்னும்பின்னும் அடுத்து வரும்போது உண்டாம் புணர்ச்சிவிதிகூறுதலே ஆசிரியர்கருத்தாதலை மேற்குறித்த எண்ணுள்ள ஐந்து சூத்திரங்களாலும் நன்கறியலாம். அதனால், சேந்தன்பூதன், சேந்தம்பூதன் என்பனபோன்ற ஒட்டியற்பெயர்கள் இயல்பீறாகவும் திரிந்தும் சேந்தனுக்குமகன் பூதன் என்று பொருள்படுவனவன்றி,* வேறு முறைப்பொருட்குரியனவல்ல என்பது தேற்றமாகும். இத்தகையபெயர்கள்—மாந்தரஞ்சேரல், குட்டுவஞ்சேரல், குட்டுவன்கோதை எனச் சேரவேந்தரிடையும் காணப்படுவனவாம். மாந்தரன் என்ற சேரனொருவன உளனென்பது 'அறன்வாழ்த்த நற்காண்ட விறன்மாந்தரன்' என்பதனால் அறியத்தக்கதும். "மாந்தரன்

---

*"சங்கரனுக்கு மகனுயுள்ள சாத்தனை சங்கரஞ்சாத்தன்" என்றார் வீரசோழிய வுரைகாரரும் (தொகைப். 1. உரை).

புதல்வனாதலின் இவனுக்கு (மாந்தரஞ்சேரலிரும்பொறைக்கு) இப்பெயர் வந்தது" என்று மகாமகோபாத்தியாய—ஐயரவர்களும் இத் தொடர்க மொழிப்பொருளை விளக்குதல் காண்க.* இனி, குட்டுவஞ்சேரல் என்பதற்குக் குட்டுவற்குமகன் சேரல் என்பது பொருள். இப்பெயருடையான் செங்குட்டுவன்மகன் என்பது பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பதிகத் திறுதிவாக்கியத்தா லறியப்படும். செங்குட்டுவனைக் குட்டுவன் என்றே கூறுவர் பரணர் முதலியோர். அதனால், அவன்மகனும் குட்டுவனெனப்படானாதலின்,† தந்தையாகிய(செங்)குட்டுவற்குமகனான சேரல் என்பதே குட்டுவஞ்சேரற்குப் பொருளாம் என்க. பிற்காலத்தே கோளநாடாண்ட வேந்தரும் வேளிரும்—ஸ்ரீவல்லவன்கோதை, சடையன் கருநந்தன், கருநந்தடக்கன் என்றும், அவர் மனைவியர், ஆதிச்சனுமைபம்மை (சேரமாதேவி), முருகஞ்சேந்தி (ஆய் குலமாதேவி) என்றும் இத்தகைய ஒட்டியற்பெயர்களால் வழங்கப்படுதலைச் சாஸனங்களிலே பெருகக்காணலாம். இவற்றையும் மேற்கூறியவாறு தந்தையரும் மக்களுமாக விரித்துக்கொள்க. மலைநாட்டு அரசர்தலைவர்க்குள்மட்டுமன்றி அந்நாட்டுக் குடிமக்களுள்ளும் இவ்வகைப்பெயர்கள் அசாதாரணமாக வழங்கிவந்தன என்பதற்கு, அக் கோளநாட்டுள்ள எண்ணிறந்த தமிழ்ச்சாஸனங்களே போதிய சான்றாக உள்ளன.‡ ஏனைத் தமிழ்நாடுகளிலோ இவ் வொட்டியற்பெயர்கள் அருகியே காணப்படுவன. இவ்வாறு அரசரையும் அவர் குடிமக்களையும் தந்தைபெயருடன்சார்த்தி அநாதிகாலமாக வழங்கி வரும் மலையாளநாடு, பிறர்கருத்துப்படி மருமக்கட்டாயத்தைப் பழைமையாக உடையதாயின், தமிழ்கூறு நல்லுலகத்துள் அடங்கிய அந்நாட்டுவழக்குமிகுதி நோக்கி—'ஒட்டியற்பெயர்கள் தந்தை-மக்களையே

---

*புறநானூறு, பாடப்பட்டோர்வரலாறு, பக். 66. ('சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறை' பார்க்க.)

†தந்தையைப்பெற்ற பாட்டன்பெயரையே அவன் மகன்புதல்வன் தரித்தல் தொன்றுதொட்டுவரும் தமிழ்மரபாம். அதனால் அம்மகன்புதல்வனைப் 'பெயரன்' எனபர்; 'தந்தைபெயரன்' (ஐங்குறு. 403) எந்தை பெயரனை' (கலித். 81.), 'முதல்வன் பெரும்பெயர் முறையுளி பெற்ற புதல்வன்' (ஷி.75) எனத் தலைவன்பெற்ற புதல்வனை அத்தலைவன்தந்தையின் பெயர்கொண்டவன் என முன்னோர் கூறுதலும் காண்க.

‡இவற்றுள் ஒருசாஸனத்துக் கண்ட ஒட்டியற்பெயர்கள் வருமாறு:—பாண்டன் சங்கரன், சேந்தன் நாகன், குமரன் அச்சுதன், மணியன் கண்டன், சடையன் நாராசணன், கண்டந் துப்பிரமணியன், சங்கரன சடையன், கடம்பந் தாயன், நக்கன் மாதவன், கண்டன் சாத்தன், சீதரங் குமரன், கண்ணஞ் சாத்தன்—என்பன (T. A. S. i, p. 199).

யன்றி, மாமன்-மருகரையும் உணர்த்துவன' என்ற கருத்தமைய ஆசிரியர் சூத்திரம் அமைத்துக்காட்டத் தவறுவரோ? "இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்" என்று தொடங்கி, அத்தந்தையே அதிகாரப்பட்டு வரப் பின் ஐந்துசூத்திரங்களையும் தொல்காப்பியனார் அமைத்துச்செல்லுதலால், தந்தையும் மக்களுமன்றி வேறுமுறைச்சொற்கள் அச்சூத்திரங்களிற் புகுதற்கிடமில்லை. அதனால், 'மக்கண்முறை' என்றது மருமக்களை உள்ளடக்குவதன்றாம். ஆகவே, சேந்தம்பூதன் என்றாற் போன்றவை சேந்தன்மருகன் பூதன் என்ற பொருளில் அவர்காலத்து வழங்கினவல்ல என்பது தேற்றமாகும். அன்றியும், முருகன்மருமகள் சேந்தி, அந்துவன் மருமகள் செள்ளை என்ற பொருளிலன்றி, முருகன் மகள் அந்துவன்மகள் என்ற பொருட்கண் முருகஞ்சேந்தி, அந்துவஞ் செள்ளை என்று சேரநாட்டரசியர்பெயர் வழங்குதலை மேலே விளக்கியுள்ளேன். அதனால் முற்காலத்தும் பிற்காலத்தும் சேரநாட்டுவழங்கிய ஒட்டியற்பெயர்கள் யாவும் தந்தையர்க்கும் அவர்பெற்ற மக்கட்குமுள்ள முறையைக் காட்டுவனவேயன்றிப் பிறவாறில்லையென்பது மிகத் தெளிவாகும். இங்ஙனம் தந்தைமக்களைக் குறித்துவருதற்கு மலைநாட்டுப் பெருவழக்கும் சங்கச்செய்யுளாகிய பேரிலக்கியங்களும் தொல்காப்பியப் பேரிலக்கணமும் தக்கசான்றாகநிற்றலால், மருமக்கட்டாயமே மலையாளத்தின் அநாதிவழக்கென்பார்கூற்றுச் சிறிதும் அமையாதென்க. எனவே "தாயத்தி னடையா" என்ற சூத்திரத்தால் (பொருளியல்-27) ஆசிரியர் தொல்காப்பியனார் கருதிய உரிமைமுறை—'தந்தையரொப்பர் மக்கள்' கிழவனும் கிழத்தியும்....மக்களொடு துவன்றி' என்ற அவ்வாசிரியர்வாய்மொழியாலும் ஒட்டியற்பெயர்க்கு அவர்கூறிய விதிச்சூத்திரங்களாலும் மக்கட்டாயமேயன்றிப் பிறிதன்று என்பது மலைவில்லாதல் காண்க.

## V. முடிவுரை.

இதுகாறும் விரிவாகக் கூறிப்போந்தவற்றால், படைப்புக்காலந் தொட்டுவரும் பழந்தமிழ்க் குடியினராய முடிகெழுவேந்தர் மூவரும் வழக்கவொழுக்கங்களாலும் மனோபாவனைகளாலும் பெரிதும் ஒற்றுமைப் பட்டிருந்தவரே என்பது பண்டைநூல்களால் தெளிய அறியப்படுதலின், அவருள் சோழபாண்டியரையொழிக்கச் சேரராகிய ஒருபிரிவினர்க்கு மட்டும் பிற்காலத்துண்டாகிய புதிய தாயமுறையைப் புகுத்துவது கற்பனையாகுமேயன்றிச் சரித்திரவுண்மைக்குச் சிறிதும் உரியதன்று என நன்குணர்ந்துகொள்க.

---

# 1929ஞு செப்டம்பர்மீ 17உ (சுக்கிலஞு புரட்டாசிமீ 2உ) மாலை 5-30-மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகசபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1 மகா-ா-ா-ஸ்ரீ K. ராமையங்கார் அவர்கள், B.A., B.L.,
(அக்கிராசனம் வகித்தவர்)

2 ,, S. சோமசுந்தரபாரதி அவர்கள் M.A., B.L.

3 ,, V. S. ராமஸ்வாமி சாஸ்திரியாரவர்கள் B.A., B.L.

4 ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.

5 ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., M.L.C.

இவர்கள் வந்திருந்தார்கள்.

## தீர்மானங்கள்

I 1929-ஞு மார்ச்சுமீ முதல் ஆகஸ்டுமீ முடிய உள்ள வரவுசெலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலை செனேட்டு (Senate) க்குச் சங்கத்தினின்றும் ஒரு பிரதிநிதியை அனுப்பவேணுமென்று ஷை சர்வ கலாசாலையார் கேட்டுக்கொண்டபடி வருகிற சங்கவருஷோத்ஸவ மஹா ஸபைக்கூட்டத்தினின்றும் பிரதிநிதியைத் தெரிந்தெடுத் தனுப்பவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று.

III கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ பண்டித. அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள் கேட்டுக்கொண்டபடி அவருடைய செலவில் ஸ்ரீ பேளிகேட் மெடல் தயாரித்துக் கொடுக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

IV 1929—1930-ம்ஞுத்திய சங்கமாபீசு வரவுசெலவுமதிப்புத்திட்டம் திருத்தங்கள்செய்து சீர்ப்படுத்தப்பட்ட பிரகாரம் அங்கீகரிக்கலாயிற்று.

V சங்கத்தின் 1928—1929-ம்ஞுத்திய வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனை செய்யவேணுமென்று மதுரை ஹைகோர்ட்டு வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ V. சுந்தரமையரவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

VI சங்கவருஷோத்ஸவத்தில் படிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கைப் பத்திரம் அங்கீகரிக்கலாயிற்று.

VII சங்க வருஷோத்ஸவத்தை வழக்கம்போல்நடத்துதல், அதற்கு அக்கிராசனராக வரும் மாட்சிமைதங்கிய சென்னைக் கவர்னர்துரையவர்களை வரவேற்றல், அவர்களுக்கு வரவேற்புப்பத்திரம் (Address) வாசித்துக் கொடுத்தல் சம்பந்தமாகத் தகுதியான ஒழுங்குகள்செய்யவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று.

மதுரை,
17—9—1929.

K ராமையங்கார்,
அக்கிராசனம் வகித்தவர்.

உ

# ஒரு செய்யுட்பொருளாராய்ச்சி.

## சிறுபாணாற்றுப்படை.

"மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயின்மயிற் குளிக்குஞ் சாயற் சாஅய்
உயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ
வயங்கிழை யுலறிய வடியி னடிதொடர்ந்
தீர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி யோதி
நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்ந்
தியாணர்க் கோங்கி னவிர்முகை யெள்ளிப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்செறி நீர்தரு மெயிற்றி னெயிறெனக்
குல்லையம் புறவிற் குவிமுலை யவிழ்ந்த
முல்லை, சான்ற கற்பின் மெல்லியன்
மடமா னோக்கின் வாணுதல் விறலியர்" (அடி 15–31.)

என்பவற்றுள் வரும் 'குறங்கென' என்பதிற் குறங்கென்பதைப் பிரித்து, குறங்குடன்செறிந்த குறங்கு எனக் கூட்டி நச்சினார்க்கினியர் பொருள் கூறினர். அங்ஙனங் கோடல் சிறப்பின்று. ஏனெனின்? ஆசிரியர், மாலையணிபடக்கூறுதலானும், வாழைக்கு உவமையாக்கிக் கூறியிருத்தலானு மென்பது. குறங்கென மால்வரையொழுகிய வாழைபோலச் சேர்ந்து என்று உவமையை விரித்துப் பொருள்கொள்க, இங்ஙனம் பொருள்கொள்ளுங்கால் அவ்வடிகள் இதரவிதர உவமையாகும். உடன் செறிந்த என்பதே ஒன்றோடொன்று செறிந்தமையை யுணர்த்துமாகலின் குறங்கு என்பதை மாற்றிக் கூட்டவேண்டியதின்றாம். இங்ஙனமே, "அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையில் "குறங்கினையுடையாள்" என்று துணித்துக்கூறியபின் "குறங்கென மால்வரையொழுகிய வாழை" என்றோதலின் இஃது அடுக்கியதோற்றம் அன்றெனப் பேராசிரியர்கூறுதலானும் அறியப்படும்.

.இனி, 22-ம் அடியில்வரும் ஓதி என்பதை ஆற்றும் என்பதோடு கூட்டிப் பொருள்கூறுதலினும், ஓதி என்பதைக் கூந்தலெனக்கொண்டு, கூந்தலிலணிந்த வேங்கைப்பூப்போலும் இதுவுமென்று, அவ்வேங்கை மலரில் வீழும் வண்டுகள் மயங்கி நச்சி ஆற்றும் சுணங்கெனப் பொருள் கோடலும் சிறப்பாகும். இன்னும்,

"பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
உருவ வான்மதி யூர்கொண் டாங்குக்
கூருளி பொருத வடுவாழ் நோன்குறட்
டாரஞ் சூழ்ந்த வயில்வாய் நேமியொடு" (அடி. 250-253)

என்பதன்கண் ஊர்கோடல் என்பதற்கு, நச்சினார்க்கினியர் பரத்தல் எனப் பொருள்கூறியுள்ளார். அங்ஙனமாயின், சூட்டிற்கு உவமை இன்றாம். வண்டிச்சில்லின் குறட்டிற்கு மதியையும், ஆர்களுக்குக் கிரணங்களையும், ஆர்களின்மேல் வளைந்த மரத்திற்கு (வளையத்துக்கு)ப் பரிவேடத்தையும் உவமையாக ஆசிரியர்கூறுதலின் ஊர் என்பதற்குப் பரிவேடம் எனப் பொருள்கோடலே பொருத்தமாம். திருக்கோவையாரில் வரும், "மையார் கதலிவனத்து" என்னும் 26-ம் செய்யுளுள் வரும் "மதியூர்கொள் வெற்பின்" என்பதன் உரையில், "ஊர்கொளல்—குறைவின்றி மண்டலமாக ஒளிபரத்தல்; பரிவேடித்தல் எனினும் அமையும்;" எனப் பேராசிரியர் கூறுதலினாலே, ஊர்கோடல் என்பதற்குப் பரிவேடித்தலும் பொருளாதலின் அவ்வாறு பொருள்கோடலே ஈண்டுப் பொருத்தமாம். பரத்தல் என்பதும் ஒருவாறு அப்பொருளைத் தருமாயினும் பரிவேடம் என்னும்பொருளைத் தெற்றென விளக்காமையின் 'பரிவேடம்' என விளங்கக்கூறலே சிறப்பாம். கம்பரும்,

"தேர்கொண்டு வள்ளல் வந்தா னென்றுதஞ் சிந்தை யுந்த
ஊர்கொண்ட திங்க ளென்ன மன்னனை யுழையர் சுற்ற"

என்னுஞ் செய்யுளில் (தைலமாட்டு—௩௭.) ஊர்கொளல்—பரிவேடித்தல் என்னும் பொருள்படக் கூறுதல் காண்க.

சி. கணேசையர்.

# தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகன்ஆபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்

ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்

எழுதுவது.

[௩௬௦-ம் பக்கத்தொடர்ச்சி.]

411-வது சூத்திரம். இசைநிறை யசைநிலை பொருளொடு புணர்தலென்
றவைமூன் றென்ப வொருசொல் லடுக்கே.

தெய்வச்சிலையார் உரைகொண்ட சொல்லதிகாரப்பதிப்பில் இச்சூத்திரம் 'இசைப்படு பொருளே நான்குவரம் பாகும்' (தொல். சொல். 423) என்ற சூத்திரத்துக்குமுன் காணப்படுகின்றது. 'இசைப்படுபொருளே ...........', 'விரைசொல்லடுக்கே ........' (தொல். சொல். 424), 'கண்டீ ரென்றா........' (தொல். சொல். 425), 'கேட்டையென்றா........' (தொல். சொல். 426) என்ற நான்கு சூத்திரங்களும் அடுக்கைப்பற்றி உணர்த்துதலால், தெய்வச்சிலையார்கொண்டுள்ள முறையே மேலானது என்று தோன்றுகின்றது.

412-வது சூத்திரம்.

வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே
வினையின் றொகையே பண்பின் றொகையே
யும்மைத் தொகையே யன்மொழித் தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே.

வேற்றுமைத்தொகைமுதலியவற்றின் பொருள் :—

உரையாசிரியர்:—வேற்றுமையுருபுதொக்குநின்ற தொகை. (அடுத்த சூத்திரவுரையின்கண் உள்ளது)

சேனாவரையர்:— வேற்றுமைப்பொருளையுடையதொகை யென்றானும் வேற்றுமைப்பொருடொக்க தொகை யென்றானும் விரியும்.

நச்சினார்க்கினியர்:—வேற்றுமையுருபுகள் தொக்க தொகை.

தெய்வச்சிலையார்:—வேற்றுமைப் பொருள் குறித்த தொகை. தொகைச்சொல்லாவது இரண்டு விட்டிசைத்து நில்லாது ஒட்டிநிற்பது. இஃது ஒட்டுப்பெயர் என்னுங் குறியும் பெறும்.

உரையாசிரியர், நச்சினார்க்கினியர் இருவர்மதமும் ஒன்றே. சேனாவரையர்கொள்கை இரண்டனுள் ஒன்றனைக் கூறினர் தெய்வச்சிலையார்.

சேனாவரையர், 'வேற்றுமையுருபும் உவமவுருபும் உம்மையும் வினைச்சொல்லீறும் பண்புச்சொல்லீறும் தொகுதலிற் றொகையாயின வென்பாரும், அவ்வப்பொருண்மேல் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்படத் தம்முளிசைதலிற் றொகையாயினவென் பாருமென இருதிறத்தர் ஆசிரியர்' என்று கூறி, '(1) செய்தான் பொருள், இருந்தான் மாடத்து என உருபுதொக்கு ஒருசொன்னீர் மைப்படாதனவுந் தொகையாவான்சேறலின் அவற்றை நீக்குதற்கும், (2) வேழக்கரும்பு, கேழற்பன்றி என்புழித் தொக்கனவில்லையெனினும் தொகையென வேண்டப்படுமாகலான் அவற்றைத் தழுவுதற்கும், (3) உருபு முதலாயின தொகுதலிற் றொகையென்பார்க்கும் ஒட்டி ஒருசொன் னீர்மைப்படுதலுந் தொகையிலக்கணமெனல்வேண்டும்' என்றற்கு மாகப் பின்னர்க்கூறிய இலக்கணத்தைக்கொள்ளவேண்டுமென்று முதலிற்கூறிய இலக்கணத்தைமூன்றுகாரணங்களால் மறுக்கின்றனர். மேலும், "'உருபு தொகவருதலும்'(தொல்.சொல்.104)எனவும், 'வேற்றுமை தொக்கபெயர் வயினானும்' (தொல். சொல. 418) எனவும், 'உம்மைதொக்கபெயர்வயினா னும்' எனவும், 'உவமைதொக்கபெயர்வயினானும்' எனவும் ஓதலால் அவை ஆண்டுத் தொக்கனவெனப்படுமன்றோ வெனின்" என்று ஆசங் கித்து "அற்றன்று 'அதுவென்வேற்றுமையுயர்திணைத்தொகைவயின்' (தொல். சொல். 94) என்புழி அதுவெனுருபுநின்று கெட்டதாயின் நின்றகாலத்துத் திணைவழுவாம்; அத்திணைவழு அமைவுடைத் தெனின் விரிக்கின்றுழி நான்காமுருபு தொடாது அதுதன்னையே விரிப்பினும் அமைவுடைத்து; அதனான் முறைப்பொருட்டோன்ற நம்பிமகன் என இரண்டுசொற்றொக்கனவென்பதே ஆசிரியர்கருத்தெனல் வேண்டும். அல்லதூஉம் வினைத்தொகை, பண்புத்தொகை, அன் மொழித்தொகை யென்பனவற்றின்கண் வினையும் பண்பும் அன் மொழியுந் தொக்குநில்லாமையானும், அஃதே கருத்தாதலறிக" என்று கூறுகின்றனர்.

இங்கு வேற்றுமையுருபும், உவமவுருபும், உம்மையும், வினைச்சொல் லீறும், பண்புச்சொல்லீறும் தொகுதலிற் றொகையாயின என்று சொல்லுவோர் யார் எனத் தெரியவில்லை. உரையாசிரியர் வேற்றுமை யுருபுதொக்குநின்றதொகை வேற்றுமைத்தொகை என்றே கூறுவதா லும், 'பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப...' (தொல். எழுத். புண. 30) என்னுஞ் சூத்திரவுரையில் பெயரும் பெயருமாய்க் கூடியு மிசைப்ப என்று கூறுவதாலும் வேற்றுமையுருபு முதலியன தொக்கு ஒருசொன்னீர்மைப்பட்டதே தொகை எனபது அவரது கருத்து ஆகும். அவ்வாறாகில், சேனாவரையர்மறுப்பிலுள்ள முதற்காரணமும் மூன்றாங்காரணமும் நில்லா. அவர்கூறும் இரண்டாங்காரணத்தை, 'கேழற்பன்றி, வேழக்கரும்பு என்பனவற்றிற்குத் தொக்கன இன்மையிற் றொகைச்சொல்லாமாறு என்னையெனின், அவற்றிற்கும் ஒன்றை யொன்று விசேடித்துநிற்கின்றதன்மையை உணர்த்துதற்குவரும் ஆகிய என்னும் வாசகந் தொக்குநின்றதென்றே கோடும். அன்றி...... குன்றலுந் தொகையாமென்று உணர்க' என்ற சொற்றொடரால் நச்சினார்க் கினியர் சமாதானம் கூறுகின்றனர். 'அதுவென்வேற்றுமை......' (தொல். சொல். 94,* என்ற சூத்திரத்தைப்பற்றிச் சேனாவரையர் கூறியதை 'அதுவெனுருபு நின்றாலல்லது கெடுதலின்மையின் அது நின்று கெட்டதென்னும் பொருள்தால் ஆண்டுக் கூறிப்போந்தாம்' என்ற சொற்றொடரால் நச்சினார்க்கினியர் மறுத்தனர். ஆனால் அச்சூத்திரத் தில் உயர்திணைத்தொகைவயின் என்பதற்கு உயர்திணையோடு சம்பந் தப்பட்டவிடத்தில் என்பதே உரையாசிரியர்கூறும் பொருளென்று அச்சூத்திரக்குறிப்பில் எழுதப்பட்டது. அப்பொருளைக்கொள்ளின்

---

* இச்சூத்திரத்திற்குச் சேனாவரையர்மதப்படி நம்பிமகன் என்பதை நம்பிக்கு மகன் என்று விரிப்பதுபோல், எருத்துடையான் என்பதை எருத்திற்கு உடை யான் என்று விரிக்கலாமா? கூடாதா? விரிக்கலாம் என்றால் எருத்துடையான் என்பதில் எருது அஃறிணையாகையால் எருத்துடையான் என்பதை உயர்திணைத் தொகையென்று கூறலாமா? கூறலாமெனின் அவ்வாறு கூறுவதற்குப் பிரமா ணம் யாது? கூடாது எனில் எருத்தினது உடையான் என்று கூறவேண்டி வரும். அவ்வாறு வழக்கு இல்லை. மேலும் நம்பிக்குமகன், எருத்திற்கு உடை யான் என்ற பிரயோகம் எச்சூத்திரத்தாற் பெறப்படும். ஆதலால் அதுவென் வேற்றுமையுடையசொல் உயர்திணைச்சொல்லோடு தொடரப்பட்டால் அது வென் உருபுகெடக் குகரம்வரும் என்று பொருள்கொள்ளுவதே பொருந்தும்.

சேனாவரையர் எழுப்பும் ஆசங்கைக்கும் நச்சினார்க்கினியர் கூறும் மறுப்புக்கும் இடமில்லை.

தெய்வச்சிலையார், சேனாவரையர்கூறிய முதற்கொள்கையாகிய 'வேற்றுமைப்பொருளையுடைய தொகை' என்பதே வேற்றுமைத்தொகை என்பதற்குப் பொருளாகக்கொண்டனர். இவ்வாறு கூறும்போது (வடமொழியில்) சமாசன் (ஸமாஸ:) என்பதின் ஒருபொருளாகிய கூட்டிச் சொல்லப்படுதல் என்பதை மனத்தில்வைத்துக்கொண்டனர்போலும். ஆனால், 'பண்புதொகவரூஉம்...' (தொல். சொல். 418) என்னுஞ் சூத்திரவுரையில் 'அல்லாதமொழி தொகுதலின், அன்மொழித்தொகையாயிற்று' என்று அவரே கூறுவதால் உரையாசிரியர்மதமும் அவருக்குச் சம்மதமென்றே தோன்றுகின்றது. சேனாவரையர் தாம்கூறிய முதற் கொள்கையிற் சிறிது குறைபாட்டைக்கருதி வேற்றுமைப்பொருடொக்க தொகை என்று கூறினர்போலும். வேற்றுமையுருபு இருந்தே வேற்றுமைப்பொருள் வரவேண்டுவதால் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கூறியமுறையே வேற்றுமையுருபு தொக்க தொகை என்றே பொருள் கொள்ளுவது மேலானது என்று தோன்றுகின்றது.

413-வது அவற்றுள்,
சூத்திரம். **வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல.**

இச்சூத்திரவுரையில் இரண்டாம்வேற்றுமைத்தொகைக்கு 'நிலங்கடந்தான்' என்பதை உதாரணமாக உரையாசிரியரும், சேனாவரையரும், தெய்வச்சிலையாரும் கூறினர். தெய்வச்சிலையார் 'நிலத்தைக்கடந்தான், வாளால்வெட்டினான், கொலைக்கு உடம்பட்டான், வரையினின்றும் பாய்ந்தான், குன்றத்துக்கண் இருந்தான் என்றவழி இறுதிநின்ற சொல் தொழிலுணர்த்தாது அதுசெய்தார்க்கும் பெயராகிவந்தவழி நிலங்கடந்தான், வாள்வெட்டினான், கொலையுடம்பட்டான், வரைபாய்ந்தான், குன்றத்திருந்தான் என இரண்டுபெயரும் ஒட்டி ஒருசொல்லாகி வரும்' என்றுங் கூறினர். இதனைநோக்குமிடத்துப் 'பெயரினாகியதொகையுமா ருளவே....' (தொல். சொல் 67) என்னுஞ் சூத்திரவுரையில் 'நிலங்கடந்தான், டாக்கொணர்ந்தான் எனப் பெயரொடு வினைவந்து தொக்க வினையினாகிய தொகையுமுள வென்பதாம்' என்ற சேனாவரையர்வாக்கியம் எவ்வாறு பொருந்தும்?

'எழுத்ததிகாரத்திலுள்ள 'பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப—வேற்றுமை யுருபு நிலைபெறு வழியுந்—தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்...'* (தொல். எழுத். புணரி. 30) என்னுஞ் சூத்திரத்திற் பெயருந் தொழிலும் ஒருங்கிசைப்ப, வெற்றுமையுருபின் தோற்றம் வேண்டாத்தொகுதிக்கண் என்றவிடத்துத் தொகுதி என்ப தற்கு 'வினையின்தொகுதிகாலத்தியலும்' (தொல். சொல். 415) என்ற விடத்திற்போலத் தொகை என்று பொருள்கொண்டு அவ்வாறு சேனு வரையர் கூறினர் என்பது 'எல்லாத் தொகையும் ஒருசொன் னடைய' (தொல் சொல். 420) என்னுஞ் சூத்திரவடியிற் கண்ட அவரது உரையி னின்று நன்குவிளங்குகின்றது.'

இளம்பூரணத்தில் 'அத்தொகுதிக்கண் உருபுகள்பலவகையும் புலப் படாதேநின்றன என்ப ஒருசாரார்; ஒருசாரார் இல்லை என்ப' என்ற சொற்றொடரால் உணர்த்தப்படும் இரண்டுகொள்கைகளுக்கும் வேறு பாடு யாது?

414-வது சூத்திரம்:—உவமத் தொகையே யுவம வியல.

இச்சூத்திரவுரையில் உரையாசிரியர் 'துடியை ஒக்கும் நடு, துடி நடு என்று இரண்டனுருபுபற்றிவருமாகலின், உவமத்தொகை என்றது என்னையெனின்' என்று ஆசங்கித்து, 'துடிநடு என்புழி, உவமவுருபும் வேற்றுமையுருபும் என இரண்டும் தொக்கவேணும், துடிபோலும் நடு எனத் தொகைக்கு உவமப்பொருளே சிறப்புடைத்தாகலின் அது தொகையென்பது' என்று அதற்கு விடையளித்தனர்.

சேனுவரையர் 'புலிப்பாய்த்துளையொக்கும் பாய்த்துள்...என விரிதலின் அவையெல்லாம் வேற்றுமைத்தொகையெனப்படும்; அதனுன் உவமத்தொகையென ஒன்றில்லை யெனின்' என்று ஆசங்கித்து,

* அச்சூத்திரத்திற் சேனுவரையர் பிரிந்து இசைப்ப வேற்றுமையுருபு நிலைபெறுவழியும், ஒருங்கிசைப்பத் தோற்றம்வேண்டாத் தொகுதிக்கண்ணும் என்று முறைப்படுத்திப் பொருள்கொண்டனர். உரையாசிரியர் அவ்வாறு கொள்ளாது பிரிந்திசைப்ப வேற்றுமையுருபு நிலைபெறுவழியும் தோற்றம் வேண்டாத்தொகுதிக்கண்ணும், ஒருங்கிசைப்ப வேற்றுமையுருபு நிலைபெறுவழி யும் தோற்றம்வேண்டாத்தொகுதிக்கண்ணும் என்று பொருள்கொண்டது

தாங்கு

'அற்றன்று, சொல்லுவார்க்கு அது கருத்தாயின் வேற்றுமைத் தொகையுமாம். அக்கருத்தானன்றிப் புலியன்ன பாய்த்துள், பொன் மானும் மேனி என வேற்றுமையோடு இயைபில்லா உவமவுருபு தொடர்ப் பொருட்கட் டொக்கவழி உவமத்தொகையாவதல்லது வேற்றுமைத் தொகையாமா றில்லையென்க' என்று அதற்கு விடைகூறினர்.

அவ்வாறே 'மழையன்ன வண்கை யென்றவழி இரண்டாமுருபு விரியாமலும் தானின்று உவமிக்கப்படும் பொருளைக் காட்டுதலின் இவ் வாறு வருஞ் சொற்களைநோக்கி உவமத்தொகை யென்றார்' என்பர் தெய்வச்சிலையார்.

நச்சினார்க்கினியர், 'இங்ஙனம் வேற்றுமையுருபும் உவமவுருபும் விரிந்துழி வேற்றுமைத்தொகையென்று கோடுமோ? உவமத்தொகை யென்று கோடுமோ? எனின்' என்று ஆசங்கித்து, 'ஆசிரியர் தாம் மேற்கூறும் உவமவுருபுகளிற் சில இரண்டாவதற்கு முடிபாமென்பது உணர்த்துதற்கு உவமவுருபிற்கெல்லாம் பொதுவாய் வழக்குவாசகமாய் நிற்கும் ஒப்பென்னும் உருபினைக் 'காப்பினொப்பின்' (தொல். சொல்.) என எடுத்து ஓதினாதலின் அவ்விரண்டாவது அவ்வுவமவுருபுகளான் முடிந்துநின்றுழி உவமத்தொடர்மொழி ஒப்புமைப்பொருளே தந்து நிற்றலின் உவமத்தொகையென்று கோடும்' என்று விடையிறுத்தனர்.

நச்சினார்க்கினியர் இச்சூத்திரவுரையிறுதியில் 'சேனாவரையர் இவற்றை(அன்ன, மானும், நோக்கு முதலியன) உவமவுருபன்றென்றும் உவமவுருபுகளை இரண்டாவது கொண்டுமுடியாதென்றும் கூறினரா லெனின், அவர் ஆசிரியர்கருத்தஞ் சான்றோர்செய்யுள்வழக்கமும் உணராமற் கூறினரென்பது இக்கூறியவாற்றான் உணர்க' என்றார். இவ்வாறு சேனாவரையர்கூறியதாக இச்சூத்திரத்தின்கண் அவர் எழுதிய உரையிலிருந்து தெரியவில்லை. 'மழையையொக்கும் வண்கை' என்று கூறுமவர் 'உவமவுருபுகளை இரண்டாவது கொண்டுமுடியாது' என்றார் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?

[தொடரும்.]